U.S. DEPARTMENT of STATE
TRAVEL.STATE.GOV BUREAU OF CONSULAR AFFAIRS

# 2015 பல்வகைமை குடியேற்ற வீசா நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் (DV – 2015)

## நிகழ்ச்சித்திட்டப் பொதுப்பார்வை

காங்கிரசினால் பணிப்பாணை வழங்கப்படும் பல்வகைமை குடியேற்ற வீசா நிகழ்ச்சித்திட்டம் வருடந்தோரும் இராஜாங்கத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. குடிவரவு மற்றும் தேசீயம் சம்பந்தமான சட்டத்தின் (INA) 203 (C) பிரிவு 'பல்வகைமை குடியேற்றவாசிகள்' என்னும் ஒரு வகுப்புக்கான ஏற்பாட்டை வழங்குகின்றது. இவர்கள் அமெரிக்காவுக்கு வரலாற்று ரீதியாக மிகவும் குறைவான குடியேற்ற வீதாசாரங்களைக்கொண்ட நாடுகளிலிருந்து வருவோராவர். 2015 நிதியாண்டில் 50,000 பல்வகைமை வீசாக்கள் (DVs) வழங்கப்படும். DV நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவு செய்வதற்கு ஆகுசெலவு எதுவுமில்லை.

அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ("தெரிவுபெற்றோர்") ஒரு பல்வகைமை வீசாவுக்குத் தகுதி பெறுவதற்கு எளிமையான ஆயினும் கண்டிப்பான தகுதி நிபந்தனைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். தெரிவு பெறுவோர் ஒரு எழுந்தமான கணினி வரைபடம் மூலம் தெரிவு செய்யப்படுவர். பல்வகைமை வீசாக்கள் ஆறு புவியியல் பிராந்தியங்களுக்கிடையில் விநியோகிக்கப்படும். எந்த நாடுமே ஒரு வருடத்தில் கிடைக்கக்கூடிய பல்வகைமை வீசாக்களில் ஏழு வீதத்துக்குக் கூடுதலாகப் பெற்றுக்கொள்ளமாட்டாது.

DV-2015க்குப் பின்வரும் நாடுகளின் சுதேசிகள் தகுதிபெறமாட்டார்கள். இந்த நாடுகளின் 50,000 க்கு மேற்பட்ட சுதேசிகள் இதற்கு முந்திய 5 வருடங்களில் அமெரிக்காவில் குடியேறியுள்ளமையே இதற்கான காரணமாகும்.

பங்களாதேஷ், பிரேசில், கனடா, சீனா (பெரு நிலப்பரப்பில் பிறந்தோர்) கொலம்பியா, டொமினிக்கன் குடியரசு, ஈக்குவடோர், எல்-சல்வடோர், ஹைட்டி, இந்தியா, ஜமேக்கா, மெக்சிகோ, நைஜீரியா, பாகிஸ்தான்,பெரு,பிலிப்பைன்ஸ், தென்கொரியா, ஐக்கிய ராஜ்யம் (வட-அயர்லாந்து நீங்கலாக) மற்றும் அதில் தங்கிவாழும் ஆட்புலங்கள் மற்றும் வியட்நாம்.

ஹொங்கொங் SAR, மக்காவோ SAR மற்றும் தாய்வானில் பிறந்தோர் தகுதியுள்ளோராவர்.

இந்த வருடம் தகுதியில் மாற்றங்கள் : DV 2015 க்கு நைஜீரியாவின் சுதேசிகள் தகுதியற்றோராவர்.

# தகுதி

**நிபந்தனைத் தேவை # 1:** <u>தகைமை பெற்ற நாடுகளின் சுதேசிகளாகப் பிறந்தோர்</u> பிரவேசிக்கும் தகுதிபெற்றோராவர். தகுதியுள்ள நாடொன்றில் நீங்கள் பிறக்காவிடில், நீங்கள் தகுதிப்பெற்றுக்கொள்வதற்கு ஏனைய இரு வழிகள் உள்ளன.

- உங்கள் வாழ்க்கைத்துணைவர் தகுதியுள்ள சுதேசிகளைக்கொண்ட ஒரு நாட்டில் பிறந்தவரா?
  ஆம் எனில், நீங்கள் உங்கள் வாழ்க்கைத்துணைவர் பிறந்த நாட்டை உரிமைகோர முடியும். ஆயினும் தெரிவுசெய்த பிரதேசத்தில் உங்கள் பெயரும், உங்கள் வாழ்க்கைத்துணைவரின் பெயரும் இடம்பெற வேண்டும். உங்களுக்கு பல்வகைமை வீசாக்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தோடு சமகாலத்தில் அமெரிக்காவினுள் பிரவேசித்தல் வேண்டும்.

- நீங்கள் தகுதியற்ற சுதேசிகள் வாழும் ஒரு நாட்டில் பிறந்திருந்தாலும், உங்கள் பெற்றோரில் ஒருவரேனும் இந்த நாட்டில் பிறக்கவில்லை அல்லது நீங்கள் பிறந்தவேளையில் இந்த நாட்டில் சட்டபூர்வமாக வசித்திருக்கவில்லை. ஆம் எனில் நீங்கள் உங்கள் பெற்றோர் பிறந்த நாட்டை, அதன் சுதேசிகள் DV-2015 நிகழ்ச்சித் திட்டத்துக்கு தகுதி பெற்றோராயின், உரிமை கோரலாம். இதன் அர்த்தம் சம்பந்தமாக மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு <u>அடிக்கடி வினவப்படும் கேள்விகளைப்</u> பார்க்கவும்.

**நிபந்தனைத் தேவை # 2** : அத்துடன் DV நிகழ்ச்சித்திட்டத்தின் கல்வி/வேலை அனுபவ நிபந்தனைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நீங்கள் ஒன்றில் :

- ஓர் உயர் பாடசாலைக் கல்வியை அல்லது 12 வருட கால முதனிலை மற்றும் இரண்டாம் நிலைக் கல்விநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் என்று வரைவிலக்கணம் செய்யப்படும். அதற்குச் சமமான கல்வியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது,

- குறைந்தது இரண்டுவருடப் பயிற்சி அல்லது செயல்நிறைவேற்றத்துக்கான அனுபவத்தை அவசியப்படுத்தும் ஒரு தொழிலில் கடந்த 5 வருட காலத்தினுள் 2 வருட வேலை அனுபவம்.

பிரதான DV விண்ணப்பதாரிகளின் வேலை அனுபவத் தகைமை குறித்து கூடுதலான தகவலுக்கு <u>அடிக்கடி வினவப்படும் கேள்விகளைப்</u> பார்க்கவும்.

<u>இந்த இரு நிபந்தனைத் தேவைகளையும் நீங்கள் பூர்த்தி செய்யாவிடில், DV நிகழ்ச்சித்திட்டத்துக்கான ஒரு நுழைவு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டாம்.</u>

**<u>பிரவேசக் காலப்பகுதி</u>**

DV-2015 DV நிகழ்ச்சித்திட்டத்துக்கான நுழைவு விண்ணப்பங்கள் 2013 அக்டோபர் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை கிழக்குப் பகல்வேளை நேரம் (EDT) (GMT - 4) மதியத்துக்கும் 2013 நவம்பர் 2 சனிக்கிழமை கிழக்குப் பகல்வேளை நேரம் (EDT) (GMT – 4) மதியத்துக்குமிடையில் இலத்திரன் முறையில் www.dvlottery.state.gov இல் அனுப்பப்படுதல் வேண்டும். பதிவுக்காலப்பகுதியின் இறுதிக்கிழமைவரை விண்ணப்பிப்பதற்குக் காத்திருக்க வேண்டாம். கூடுதலான கேள்வி நிலவுவதால் இணையதளத் தாமதங்கள் ஏற்படக்கூடும். தாமதமான

விண்ணப்பங்களோ, கடதாசித்தாளில் அனுப்பப்படும் விண்ணப்பங்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. ஒவ்வொரு பதிவுக்காலப்பகுதியின்போதும் ஒவ்வொரு நபருக்கும், **சட்டம் ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே அனுமதிக்கும்**. இராஜாங்கத் திணைக்களம் பன்முக விண்ணப்பங்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்னேறிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகின்றது. நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தால் தகைமை இழந்தவராகக் கருதப்படுவீர்கள்.

**DV 2015 நிகழ்ச்சித்திட்டத்தில் உங்கள் இலத்திரனியல் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தல்.**

உங்கள் இலத்திரனியல் பல்வகைமை வீசா நுழைவுப் படிவத்தை (E-DV விண்ணப்பப் படிவம் அல்லது DS-5501) கணினி மூலம் www.dvlottery.state.gov இல் அனுப்பவும். பூரணமற்ற நுழைவுப் படிவங்கள் தகைமையற்றவையாக நிராகரிக்கப்படும். DV நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவுசெய்வதற்கு ஆகுசெலவு எதுவுமில்லை.

‘ வீசா ஆலோசனையாளர்’ ‘வீசா முகவர்’ அல்லது ஏற்பாட்டாளர் ஒருவரின் உதவியின்றி, நீங்களே விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். வேறு எவராவது உங்களுக்கு உதவிசெய்தால், உங்கள் விண்ணப்பம் தயாரிக்கப்படும்போது வினாக்களுக்குச் சரியான விடைகளை வழங்குவதற்கும், உங்கள் உறுதிப்பக்கத்தையும், தனிச்சிறப்பான உறுதி இலக்கத்தையும் உங்களுடன் வைத்துக்கொள்வதற்காக நீங்களும் பிரசன்னமாகவிருத்தல் வேண்டும். நீங்கள் உங்கள் உறுதிப்பக்கத்தையும், தனிச்சிறப்புமிக்க உறுதி இலக்கத்தையும் வைத்துக்கொள்வது மிகவும் முக்கியமானதாகும். இத்தகவல் இல்லையெனில், உங்கள் விண்ணப்பத்தின் தற்போதைய நிலை குறித்து அறிந்துகொள்ளக்கூடிய கணினி முறைமையுள் உங்களால் பிரவேசிக்க முடியாது. இத்தகவலை வேறு யாராவது தம்முடன் வைத்துக்கொள்ள முன்வந்தால் நீங்கள் கவனமாகச் சிந்திக்க வேண்டும். பல்வகைமை வீசா மோசடிகள் குறித்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள அடிக்கடி வினவப்படும் கேள்விகளைப் பார்க்கவும்.

நீங்கள் உங்கள் பூரணமான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தவுடன் உங்கள் பெயர் மற்றும் தனிச்சிறப்பான உறுதி இலக்கம் என்பவற்றை உள்ளடக்கும் உறுதித்திரையொன்றைக் காண்பீர்கள். இந்த உறுதிப்பக்கத்தை அச்சிட்டு உங்கள் பதிவேடாக வைத்துக்கொள்ளுங்கள். 2014 மே 01 ஆந் திகதியிலிருந்து www.dvlottery.state.gov என்னும் இணையதளத்தில் பிரவேசித்து நுழைவோர் குடியேறுவோர் அந்தஸ்து செவ்வைபார்த்தல் என்பதில் அழுத்தி, உங்கள் தனிச்சிறப்பான உறுதி இலக்கத்தையும், தனிப்பட்ட தகவல்களையும் வழங்குவதன்மூலம் உங்கள் விண்ணப்பத்தின் தற்போதைய நிலையை செவ்வைபார்த்துக்கொள்ளலாம். DV 2015 க்கு நீங்கள் தெரிவுசெய்யப்படுவது சம்பந்தமாகவும், விண்ணப்பம் சம்பந்தமாக மேலும் என்ன செய்யவேண்டும் என்பது தொடர்பிலும், உங்கள் குடியேற்ற விசா நேர்காணல் எப்பொழுது இடம்பெறும் என்பது குறித்தும் உங்களுக்கு தகவல் வழங்கும் ஒரேயொரு வழிவகை குடியேறுவோர் அந்தஸ்து செவ்வைபார்த்தலே ஆகும். தெரிவுச் செயல்முறை சம்பந்தமாக மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அடிக்கடி வினவப்படும் கேள்விகளை மீள்பார்வையிடவும்.

உங்கள் E-DV விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பின்வரும் தகவல்களை வழங்குதல் வேண்டும்.

1. பெயர் : இறுதி / குடும்பப்பெயர் (முதல்பெயர். நடுப்பெயர் – உங்கள் கடவுச்சீட்டில் இருப்பதுபோன்று.

2. பிறந்த திகதி : நாள், மாதம், வருடம்

3. பால்நிலை : ஆண் அல்லது பெண்

4. நீங்கள் பிறந்த நகரம் :

5. நீங்கள் பிறந்த நாடு : நீங்கள் பிறந்த நாட்டுக்குத் தற்போது வழங்கும் பெயரைப் பயன்படுத்தவும்

6. DV- நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தகுதி பெறும் நாடு – வழக்கமாக தகுதிபெறும் உங்கள் நாடும், நீங்கள் பிறந்த தேசமும் ஒன்றாகவே இருக்கும். தகுதிபெறும் உங்கள் நாடு நீங்கள் வாழும் நாட்டுடன் தொடர்பற்றதாகும். தகுதி பெறாத ஒரு நாட்டில் நீங்கள் பிறந்திருப்பின். நீங்கள் தகுதி பெற்றுக்கொள்வதற்கு வேறோர் மார்க்கம் உள்ளதா என்பதை அறிந்துகொள்வதற்கு அடிக்கடி வினவப்படும் கேள்விகளைப் பார்க்கவும்.

7. குடியேறுவோர் புகைப்படங்கள் - உங்களின், உங்கள் வாழ்க்கைத் துணைவரின். மற்றும் விண்ணப்பத்தில் நிரலிடப்பட்டுள்ள உங்களின் அனைத்துப் பிள்ளைகளினதும் சமீபத்தில் எடுத்த புகைப்படங்கள், உள்ளடக்க மற்றும் தொழில்நுட்பக் குறித்துரைப்புகளை அறிந்துகொள்வதற்கு ஒரு டிஜிட்டல் புகைப்படத்தைச் சமர்ப்பித்தல் என்பதைப் பார்க்கவும். ஏற்கனவே அமெரிக்கப் பிரஜையாகவுள்ள அல்லது சட்டபூர்வ நிரந்தர வதிவாளராகவுள்ள உங்கள் வாழ்க்கைத்துணைவர் அல்லது பிள்ளையின் புகைப்படத்தை உள்ளடக்கவேண்டிய அவசியமில்லை. ஆயினும் அவ்வாறு நீங்கள் உள்ளடக்கினாலும். அதற்குத் தண்டனை எதுவுமில்லை.

   குழுப்படங்கள் எற்றுக்கொள்ளப்படமாட்டா. ஓவ்வொரு தனிநபருக்கும் ஒரு புகைப்படம் சமர்ப்பிக்கப்படவேண்டும். உங்கள் புகைப்படங்கள் சமீபத்தில் எடுக்கப்படாதவையாக, ஏதாவது வழியில் மாற்றப்பட்டதாக அல்லது கீழேதரப்பட்டுள்ள குறித்துரைப்புகளுக்குப் பொருத்தமற்றவையாகவிருப்பின், உங்கள் விண்ணப்பம் தகுதியற்றதாக்கப்படும் அல்லது விசா மறுக்கப்படும். மேலதிக தகவல்களுக்கு ஒரு டிஜிட்டல் புகைப்படத்தை சமர்ப்பித்தல் என்பதைப் பார்க்கவும்.

8. அஞ்சல் முகவரி : மே/பா
   முகவரி வழி 1
   முகவரி வழி 2
   நகரம் /பட்டினம்
   மாவட்டம் /தேசம் /மாகாணம் /மாநிலம்
   அஞ்சல் குறியெண் /ஸிப் குறியெண்
   தேசம்.

9. நீங்கள் தற்போது வசிக்கும் தேசம்

10. தொலைபேசி இலக்கம் (விரும்பினால்)

11. ஈ-மெயில் முகவரி – நீங்கள் நேரடியாகப் பிரவேசிக்கக்கூடிய ஓர் ஈ-மெயில் முகவரி. உங்கள் விண்ணப்பம் தெரிவுசெய்யப்பட்டால், உங்கள் தெரிவு குறித்து *குடியேறுவோர் அந்தஸ்து செவ்வைபார்த்தல்* மூலம் உங்களுக்கு அறிவிக்கப்படுகையில் நீங்கள் பதிலளித்தால், உங்களுக்கு இராஜாங்கத் திணைக்களத்திலிருந்து பின்தொடர், ஈ-மெயில் தொடர்பாடல் கிடைக்கும். இதில் உங்கள் குடியேற்ற விசா நேர்காணல் சம்பந்தமாக குடியேறுவோர் அந்தஸ்து செவ்வைப் பார்த்தலில் விபரங்கள் இருப்பது குறித்து தகவல்

வழங்கப்படும். இராஜாங்கத் திணைக்களம் நீங்கள் DV நிகழ்ச்சித்திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறித்து உங்களுக்கு ஈ-மெயில் எதையும் அனுப்பிவைக்கமாட்டாது. தெரிவுச்செயல்முறை சம்பந்தமாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு *அடிக்கடி வினவப்படும் கேள்விகளைப்* பார்க்கவும்.

12. இன்றுவரை நீங்கள் ஈட்டிக்கொண்ட அதியுயர் மட்டத்திலான கல்வி, (1) முதனிலை பாடசாலை மாத்திரம் (2) ஏதாவது உயர் பாடசாலை, டிப்ளோமா சான்றிதழ் இல்லை (3) உயர் பாடசாலை டிப்ளோமா சான்றிதழ் (4) வாழ்க்கைத்தொழில் பாடசாலை. (5) ஏதாவது பல்கலைக்கழகக் கல்விநெறிகள் (6) பல்கலைக்கழகப் பட்டம் (7) ஏதாவது பட்டநிலைக் கல்வி நெறிகள் (8) முதுமானிப் பட்டம் மற்றும் (9) கலாநிதிப் பட்டம்.

கல்வி நிபந்தனைத் தேவைகள் குறித்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அடிக்கடி வினவப்படும் கேள்விகளைப் பார்க்கவும்.

13. தற்போதைய திருமண அந்தஸ்து – திருமணம் ஆகாதவர், திருமணம் முடித்தவர், விவாகரத்துப் பெற்றவர் அல்லது சட்டப்பூர்வ பிரிவுநிலை. உங்கள் வாழ்க்கைத் துணைவரின் பெயர், பிறந்த திகதி, பால்நிலை, பிறந்த நகரம்/ பட்டினம், தேசம் என்பனவற்றையும், உங்கள் புகைப்படத்தைப்போன்ற தொழில்நுட்பக் குறித்துரைப்புகளுடன் கூடிய புகைப்படத்தையும் வழங்கவும்.

உங்கள் தகுதிவாய்ந்த வாழ்க்கைத்துணைவரின் பெயரை நிரலிடத் தவறுவது பிரதான விண்ணப்பதாரி தகுதி நீக்கப்படுவதற்கும், வீசா நேர்காணலின்போது சகல வீசாக்களும் மறுக்கப்படுவதற்கும் இட்டுச்செல்லும். நீங்கள் வீசா ஒன்றுக்கு விண்ணப்பிக்க முன்னராக வாழ்க்கைத் துணைவரை விவாகரத்துச் செய்யும் எண்ணம் இருப்பினும், அவரது பெயர் இங்கு கட்டாயம் நிரலிடப்படுதல் வேண்டும். ஏற்கனவே ஓர் அமெரிக்கப் பிரஜையாகவுள்ள அல்லது சட்டபூர்வ நிரந்தர வதிவாளராகவுள்ள ஒரு வாழ்க்கைத் துணைவர் விடயத்தில் அவருக்கு ஒரு DV வீசா அவசியப்பட மாட்டாது. நீங்கள் அவரின் பெயரை உங்கள் விண்ணப்பப்படிவத்தில் நிரலிட்டாலும் அது வழங்கப்பட மாட்டாது. குடும்ப அங்கத்தினர்கள் சம்பந்தமாக மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அடிக்கடி வினவப்படும் கேள்விகளைப் பார்க்கவும்.

14. பிள்ளைகளின் எண்ணிக்கை – நீங்கள் அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்தால் உயிரோடுள்ள, திருமணமாகாத, 21 வயதுக்குக் குறைவான பிள்ளைகள், உங்களுடன் தற்போது வசிக்காவிடினும் சரி, உங்களுடன் வருவதற்கு அல்லது பின்னர் வந்து உங்களுடன் சேர்ந்துகொள்வதற்கு விரும்பாவிடினும் சரி அவர்களின் பெயர், பிறந்த திகதி, பால்நிலை, பிறந்த நகரம்/பட்டினம் மற்றும் பிறந்த தேசம் என்பவற்றை நிரலிடவும். உங்கள் சொந்தப் புகைப்படத்தைப்போன்ற அதே தொழில்நுட்பக் குறித்துரைப்புகளுடன் கூடிய உங்கள் ஒவ்வொரு பிள்ளையினதும் தனிப்பட்ட புகைப்படங்களை சமர்ப்பிக்கவும்.

**பின்வரும் விடயங்களைத் தவறாது குறிப்பிடவும்.**

- உயிரோடுள்ள, இயற்கையான சகல பிள்ளைகளும்
- நீங்கள் சட்டரீதியாக சுவீகாரம் எடுத்துக்கொண்ட, உயிரோடுள்ள சகல பிள்ளைகளும்.

- பிள்ளையைப் பெற்றவருடன் நீங்கள் சட்டபூர்வமான திருமணநிலை இல்லாவிடினும். பிள்ளை தற்போது உங்களுடன் வசிக்காவிடினும் மற்றும் / அல்லது பிள்ளை உங்களுடன் இடம்பெயராவிடினும் உங்கள் இலத்திரனியல் நுழைவு விண்ணப்பத் திகதியில் 21 வயதுக்குக் குறைவான, திருமணமாகாத சகல பெறாத பிள்ளைகளும்.

  திருமணமாகிய பிள்ளைகளும், 21 வயதுக்குக் கூடிய பிள்ளைகளும் DV க்குத் தகுதியற்றோராவர். எவ்வாறாயினும், சிறுவர் அந்தஸ்து பாதுகாப்புச் சட்டம் சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் "வயது கூடிய நிலை" பிரச்சினையிலிருந்து பாதுகாப்பளிக்கின்றது. உங்கள் DV நுழைவு விண்ணப்பம் உங்கள் திருமணமாகாத பிள்ளை 21 வயதை அடைய முன்னர் செய்யப்பட்டதாயின், வீசா செயல்முறை நோக்கங்களுக்காக அவர் 21 வயதுக்குக் குறைவானவராகவே கணிக்கப்படுவார்.

  ஏற்கனவே அமெரிக்கப் பிரஜையான அல்லது சட்டபூர்வமான நிரந்தர வதிவாளராகவுள்ள ஒரு பிள்ளை பல்வகைமை விசா ஒன்றுக்குத் தகுதியற்றவராவார். உங்கள் விண்ணப்பத்தில் இத்தகைய குடும்ப அங்கத்தினர்களை சேர்த்துக்கொள்வதால் அல்லது தவிர்த்துக்கொள்வதால் உங்களுக்கு எவ்வித தண்டனையும் வழங்கப்படமாட்டாது.

  தகுதியான சகல பிள்ளைகளையும் நிரலிடத் தவறுவது பிரதான விண்ணப்பதாரி தகுதியிழப்பதற்கும், வீசா நேர்காணலின்போது சகல விசாக்களும் மறுக்கப்படுவதற்கும் இட்டுச்செல்லும். குடும்ப அங்கத்தினர்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அடிக்கடி வினவப்படும் கேள்விகளைப் பார்க்கவும்.

  DV-2015 நிகழ்ச்சித்திட்டத்துக்கு இலத்திரனியல் நுழைவு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வது சம்பந்தமாக மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அடிக்கடி வினவப்படும் கேள்விகளைப் பார்க்கவும்.

**விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்தல்**

ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் தேசத்துக்கும் கிடைக்கக்கூடிய வீசாக்களின் ஒதுக்கியளிப்பின் பேரில், தகுதிவாய்ந்த விண்ணப்பப் படிவங்களிலிருந்து தனிநபர்கள் கணினி மூலம் எழுந்தமானமாகத் தெரிவு செய்யப்படுவர். DV நிகழ்ச்சித்திட்டத்தில் தாங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனரா என்பதை அறிந்துகொள்வதற்கு சகல DV-2015 விண்ணப்பதாரிகளும் தமது DV 2015 கணினி நுழைவுவிண்ணப்பப் பதிவுமூலம் பெற்றுக்கொண்ட தனிச்சிறப்பான உறுதி இலக்கத்தைப் பயன்படுத்தி, நுழைவோர் அந்தஸ்து செவ்வைப்பார்த்தலை அணுகுமாறு கேட்கப்படுபவர். நுழைவோர் அந்தஸ்து செவ்வைப்பாத்தலை E-DV இணையதளத்தில் www.dvlottery.state.gov என்னும் முகவரியில் 2014. மே 01 ஆந் திகதி முதல் 2015 ஜுன் 30 வரையிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் விண்ணப்பம் தெரிவுசெய்யப்பட்டால், உங்களுக்கு மேலதிக அறிவுறுத்தல்களை வழங்கும் உறுதிப்படுத்தும் பக்கம் ஒன்றுக்கு வழிகாட்டப்படும். இதில் அமெரிக்காவுக்கு புலம்பெயர்தல் சம்பந்தமான கட்டணங்கள் தொடர்பான தகவலும் அடங்கியிருக்கும் DV-2015 க்கான அவர்களின் தெரிவு குறித்து தெரிவுபெற்றோருக்கு அறிவிக்கும் ஒரேயொரு வழிவகை நுழைவோர் அந்தஸ்து செவ்வைபார்த்தல் ஆகும். இராஜாங்கத் திணைக்களம் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு அறிவித்தல் கடிதங்களை அனுப்பமாட்டாது, ஈ-மெயில் மூலமும் அறிவிக்கமாட்டாது. அமெரிக்கத் தூதரகங்களோ, காவல் தூதரங்களோ தெரிவுசெய்யப்பட்டவர்களின் நிரலொன்றை வழங்கமாட்டா. தெரிவுசெய்யப்படாதவர்களுக்கும் நுழைவோர்

அந்தஸ்து செவ்வைபார்த்தல் மூலமாக மாத்திரமே அறிவிக்கப்படும். செவ்வைப்பார்த்து உங்களுக்கு அறிவிப்பதற்கு ஏனையோர்மீது தங்கியிராமல் நீங்களே நுழைவோர் அந்தஸ்து செவ்வைபார்த்தலில் பிரவேசிப்பது மிகச்சிறப்பானதாகும்.

DV ஒன்றைப்பெற்று அமெரிக்காவுக்கு புலம்பெயர்வதற்கு நீங்கள் தெரிவுசெய்யப்பட்டாலும் நீங்கள் அமெரிக்கச் சட்டத்தின்கீழ் சகல தகுதி நிபந்தனைத்தேவைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும். இந்த நிபந்தனைத் தேவைகள் நுண்ணாய்வு மட்டத்தையும், இந்த அறிவித்தலில் நிரலிடப்பட்ட ஆயினும் அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படாத பயங்கரவாதத்தின் அரசு அனுசரணையாளர்களின் தேசங்களின் சுதேசிகளைச் செயன்முறைப்படுத்துவதற்கு அவசியமான காலத்தையும் அதிகரிக்கக்கூடும்.

தகுதி நிபந்தனைத் தேவைகளைப் பூர்த்தி செய்வோரும், அவர்களின் தகுதிபெற்ற குடும்ப உறவினர்களுமான தெரிவுபெற்றோரின் விண்ணப்பங்களை செயன்முறைப்படுத்துவதும் அவர்களுக்கு DV விசாக்கள் வழங்கப்படுவதும் 30, செப்டெம்பர் 2015 நடுநிசிக்கு முன்னதாக பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். இந்த திகதிக்குப் பின்னர் எச்சூழ்நிலையின் கீழும் DVக்கள் வழங்கப்படுதலோ, சீராக்கல்கள் அங்கீகரிக்கப்படுவதோ இடம்பெறமாட்டாது. இத்திகதிக்குப் பின்னர் அமெரிக்காவிலுள்ள பிரதான விண்ணப்பதாரியுடன் இணைந்துகொள்வதற்கு குடும்ப அங்கத்தினர்கள் எவருக்கும் DVக்கள் வழங்கப்படமாட்டாது. தெரிவுச்செயல்முறை சம்பந்தமான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அடிக்கடி வினவப்படும் கேள்விகளைப் பார்க்கவும்.

## டிஜிட்டல் புகைப்பட படிமம் ஒன்றைச் சமர்ப்பித்தல்

புகைப்படமொன்று கீழே நிரலிடப்பட்டுள்ள உள்ளடக்க மற்றும் தொழில்நுட்ப குறித்துரைப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் ஒரு புதிய புகைப்படத்தை எடுத்துக்கொள்ளலாம் அல்லது ஒரு டிஜிட்டல் ஸ்கானர் மூலம் ஒரு புகைப்படப் பிரின்டை ஸ்கான் செய்துகொள்ளலாம். உங்கள் புகைப்படங்களை E-DV இணையதளத்திலுள்ள புகைப்பட வழங்குதகவு இணைப்பினூடாகப் பரிசோதித்துக்கொள்ளுங்கள். இது புகைப்பட உள்ளடக்கம் சம்பந்தமான மேலதிக தொழில்நுட்ப மதியுரையையும், ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத புகைப்படங்களின் உதாரணங்களையும் வழங்குகின்றது.


புகைப்படங்கள் 24-bit வர்ண ஆழம் கொண்டவையாக இருத்தல் வேண்டும். நீங்கள் ஒரு ஸ்கானரைப் பயன்படுத்துவதாயின் ஏற்பாடுகள் உண்மையான வர்ணத்துக்கு அல்லது 24-bit color mode க்கு உரியவையாகவிருத்தல் வேண்டும். கீழே தரப்பட்டுள்ள மேலதிக ஸ்கானிங் நிபந்தனைத் தேவைகளைப் பார்க்கவும்.

## உள்ளடக்க குறித்துரைப்புகள்

**தலை அமைவு நிலை**

- ஆள் கமெராவை நேராக நோக்கியவாறு இருத்தல் வேண்டும்
- தலை மேல் நோக்கியோ கீழ் நோக்கியோ பக்கவாட்டிலோ திருப்பப்படுதல் ஆகாது.
- தலையின் உயரம் அல்லது முகப்பகுதியின் அளவு (மயிர் உள்ளிட்டவாறு, தலையின் உச்சியிலிருந்து நாடியின் கீழ்ப்பகுதிவரை அளவிடும்போது) படிமத்தின் மொத்த உயரத்தின் 50 வீதத்துக்கும் , 69 வீதத்துக்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

**டிஜிட்டல் படிம தலை அளவு வார்ப்பு அச்சு**




மீள்பார்வை உதாரணங்கள் புகைப்பட நிபந்தனைத் தேவைகள் இணையதள பக்கத்தில்

வெளிறல் நிறப்பின்னணி

- ஆள் ஒரு வர்ண உறுதியற்ற, வெளிறிய நிறப் பின்னணிக்கு முன்பாக இருத்தல் வேண்டும்.

குவியப்புள்ளி

- புகைப்படம் நன்கு குவியப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

அலங்காரப் பொருட்கள் இல்லாமை

- ஆள் கறுப்பு நிறக் கண்ணாடியோ. வேறு முகத்தை மறைக்கும் பொருட்களையோ அணிந்திருத்தல் ஆகாது.

தலை அணிகள் அல்லது தொப்பிகள் இல்லாமை

- மத நம்பிக்கைகள் காரணமாக அணியப்படும் தலை அணிகள் அல்லது தொப்பிகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஆயினும் தலை அணி முகத்தின் எப்பாகத்தையும், மறைத்தல் ஆகாது மதத் தன்மையற்ற பழங்குடி மக்கள் அணியும் அல்லது ஏனைய தலை அணிகள் அணியப்படுதல் ஆகாது. இராணுவ, விமானக் கம்பனி அல்லது வேறு ஆளணியினர் தொப்பி அணிவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தொழில்நுட்பக் குறித்துரைப்புகள்

**<u>புதிய டிஜிட்டல் படிமம் ஒன்றை எடுத்தல்</u>**

நீங்கள் ஒரு புதிய டிஜிட்டல் படிமம் ஒன்றை எடுப்பதாயின், அது பின்வரும் குறித்துரைப்புகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**படிமக்கோப்பு வடிவமைப்பு** :- படிமம் இணைந்த புகைப்பட நிபுணர்கள் குழு (JPEG) வடிவமைப்பில் இருத்தல் வேண்டும்.

**படிமக்கோப்பின் அளவு** :- அதிகூடிய படிமக்கோப்பின் அளவு 240 kilobytes (240kb) ஆகும்.

**படிமப் பண்புறுதியும், பரிமாணங்களும்** :- ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகுறைவான பரிமாணங்கள் 600 pixels (அகலம்) x 600 pixels (உயரம்) ஆகும். படிம pixels பரிமாணங்கள் ஒருசதுர அம்சவிகிதாசாரத்தில் (உயரம் அகலத்துக்குச் சமமாக) இருத்தல் வேண்டும்.

**படிம வர்ண ஆழம்** :- படிமம் வர்ணத்தில் அமைந்திருத்தல் வேண்டும் (Pixel ஒன்றுக்கு 24 bites) 24-bit கறுப்பு வெள்ளை அல்லது 8-bit படிமங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**<u>சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படமொன்றை ஸ்கானிங் செய்தல்</u>**

புகைப்பட print ஒன்றை Scanning செய்யுமுன்னர், அது மேலே நிரலிடப்பட்ட வர்ண மற்றும் உள்ளடக்கக் குறித்துரைப்புகளைப் பூர்த்தி செய்கின்றதா என்பதை உறுதிசெய்துகொள்ளவும் . பின்வரும் Scanner குறித்துரைப்புகளைப் பின்பற்றி Print ஐ ஸ்கான் செய்யவும்.

Scanner பண்புறுதி : குறைந்தது அங்குலமொன்றுக்கு 300 புள்ளிகள் (Dpi) பண்புறுதியுடன் ஸ்கான் செய்யப்படுதல் வேண்டும் .

படிமக்கோப்பு வடிவமைப்பு : படிமம் இணைந்த புகைப்பட நிபுணர்கள் குழு (JPEG) வடிவமைப்பில் இருக்கவேண்டும்

படிமக்கோப்பு அளவு : அதிகூடிய படிமக்கோப்பின் அளவு 240 kilobytes (240 KB) இருத்தல் வேண்டும்

படிமப் பண்புறுதி : 600 x 600 pixels

படிம வர்ண ஆழம் : 24- bit- வர்ணம். (கறுப்பு வெள்ளை-ஒரு நிற அல்லது நரை நிற அளவுத்திட்ட படிமங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)

## அடிக்கடி வினவப்படும் கேள்விகள் (FAQ'S)

### தகுதி

**1. 'சுதேசி' மற்றும் 'வேறு நாட்டுக்கு உரிமைகோரும் தன்மை " என்னும் பதங்களின் கருத்து என்ன?**

'சுதேசி' என்பதன் சாதாரண கருத்து தற்போது வேறு ஒரு நாட்டில் வாழ்ந்தாலும் ஒரு குறிப்பிட்ட நாட்டில் பிறந்த அல்லது அந்த நாட்டின் தேசிய இனத்தைச் சோந்த ஒருவர் என்பதாகும். 'சுதேசி' என்பதன் கருத்து எந்த நாட்டில் பிறந்திருந்தாலும் வேறு ஒரு நாட்டுக்கு உரிமைகோரும் உரித்தைக்கொண்ட ஒருவர் என்பதுமாகும். இது குடிவரவு மற்றும் தேசியம் குறித்த சட்டத்தின் பிரிவு 202(b) யின் ஏற்பாடுகளின் கீழ் வரும் விடயமாகும்.

ஒரு நாட்டிலிருந்து அல்லது ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்திலிருந்து வரும் குடியேற்றக்காரர் மீது ஓர் எண்சார் மட்டுப்பாடு இடம்பெறுவதன் காரணமாக ஒவ்வொரு தனிநபரும் ஒரு நாட்டைச் சேர்ந்தவரென்று கணிக்கப்படுகின்றார். 'வேறு நாட்டுக்கு உரிமை கோரும் தன்மை' என்பது எந்த நாட்டின் மட்டுப்பாட்டில் நீங்கள் தங்கியுள்ளீர்களோ அந்த நாடு என்பதாகும்.

**2. நான் தகுதிபெற்ற தேசமொன்றில் பிறக்காவிடினும், விண்ணப்பிக்க முடியுமா?**

நீங்கள் இன்னமும் விண்ணப்பிக்கும் தகுதியைப் பெற்றுக்கொள்ளும் வகையில். இரண்டு சூழ்நிலைகள் உள்ளன. முதலாவது உங்கள் வாழ்க்கைத் துணைவர். தகுதி வாய்ந்த ஒரு நாட்டில் பிறந்திருந்தால் நீங்கள் அந்த வேறு நாட்டுக்கு உரிமைகோரலாம். உங்கள் தகுதி உங்கள் வாழ்க்கைத் துணைவரை அடிப் படையாகக் கொண்டிருப்பதால் உங்கள் வாழ்க்கைத் துணைவரும் தகுதிபெற்று

DV-2 விசா ஒன்றைப் பெற்றுக்கொண்டால் மாத்திரமே உங்களுக்கு DV-1 விசாவொன்று வழங்கப்படும். நீங்கள் இருவருமே உங்கள் DV க்களைப் பயன் படுத்தி, அமெரிக்காவினுள் ஒன்றாகப் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறே உங் கள் மீது தங்கியிருக்கும் உங்கள் பராயமடையாத பிள்ளை ஒரு பெற்றவர் பிறந்த நாட்டுக்கு உரிமை கொண்டாடலாம்.

இரண்டாவது, நீங்கள் பிறந்த வேளையில் நீங்கள் பிறந்த நாட்டில் உங்கள் பெற்றோரில் எவருமே பிறந்திராவிடில், அல்லது அங்கு வசித்திராவிடில் எழக்கூடிய சந்தர்ப்பமாகும். பொதுவாகவே ஆட்கள் தாம் பிறக்காத நாட்டின் வதிவாளர்களாகக் கருதப்படுவதில்லை. அவர்கள் தற்காலிகமாக ஒரு நாட்டில் விஜயம் செய்வதாயின் அல்லது கல்வி பெறுவதாயின், அல்லது வியாபாரத்துக்காகத் தற்காலிகமாக தங்கியிருப்பின், ஒரு கம்பனியின் சார்பில் அல்லது நீங்கள் பிறக்காத ஒரு வேற்று நாட்டின் அரசாங்கத்தின் சார்பில் தொழில்நிலை ரீதியாகத் தங்கியிருக்கையில் ஏற்படும் சந்தர்ப்பமாகும்.

நீங்கள் மேற்கூறிய வழிகளில் ஏதாவது ஒன்றின்கீழ் வேறு நாட்டுக்கு உரிமை கோருவதாயின் நீங்கள் E-DV நுழைவுப் படிவத்தில் #6 வினாவுக்கு விடையளிக்கும்போது ஒரு விளக்கத்தைக் கொடுத்தல் வேண்டும்.

தகுதி சம்பந்தமாக ஒரு தவறான தேசத்தை நிரற்படுத்துவது அல்லது வேறு நாடு ஒன்றைத் தவறாக உரிமைகோருவது (அதாவது நீங்கள் ஒரு செல்லுபடியான உரிமை கோரலை நிரூபிக்க முடியாத ஒரு தேசம்) உங்களின் விண்ணப்பத்தை தகுதியற்றதாக்கலாம்.

### 3. ஏன் சில தேசங்களின் சுதேசிகள் DV-நிகழ்ச்சித் திட்டத்துக்கான தகுதியை இழக்கின்றனர்?

DV க்களின் நோக்கம் ''உயர்வான அனுமதி'' தேசங்களைச் சேராத நபர்களுக்கு ஒரு குடியேற்ற வாய்ப்பை வழங்குவதாகும். கடந்த 5 வருடகாலப் பகுதியுள் அமெரிக்காவிலுள்ள குடும்ப அனுசரணை மற்றும் வேலைவாய்ப்பு அடிப்படையில் குடியேறிய விசா வகைப்பிரிவுகளைச் சேர்ந்த 50,000 நபர்களின் தேசங்களைச் சட்டம் "உயர்வான அனுமதித் தேசங்களென்று'' வரைவிலக்கணப்படுத்துகின்றது. ஒவ்வொரு வருடமும் அமெரிக்கக் குடியுரிமை மற்றும் குடிவரவுச் சேவைகள் (USCIS) குடும்ப மற்றும் வேலை வாய்ப்புக் குடியேற்ற அனுமதியைக் கணக்கீடு செய்து "உயர் அனுமதி'' எனக் கருதப்படும் தேசங்களையும் வருடாந்த பல்வகைமை விசா நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தகுதியற்றவர்களாகிய சுதேசிகளையும் இனங்காணும்வகையில் இதற்கு முந்திய ஐந்து வருடங்களுக்கான அந்தஸ்து எண்ணிக்கைகளைச் சீராக்கம் செய்கின்றது. இக்கணிப்பீடு வருடாந்தம் மேற்கொள்ளப்படுவதால், தகுதி பெறும் அல்லது தகுதிபெறாத சுதேசிகளைக்கொண்ட தேசங்களின் நிரல் வருடத்துக்கு வருடம் மாறுபடக்கூடும்.

### 4. ஒவ்வொரு பிராந்தியத்தினதும் தகுதிபெற்ற தேசத்தினதும் சுதேசிகளுக்கு எத்தனை DV-2015 விசாக்கள் கிட்டும்?

அமெரிக்கக் குடியுரிமை மற்றும் குடிவரவுச் சேவைகள் (USCIS) INA யின் 203 (c) பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு சூத்திரத்தின் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் பிராந்திய DV மட்டுப்பாடுகளைத் தீர்மானிக்கின்றது. இக்கணிப்பீடுகள் பூரணமாகியதும் (USCIS) இந்த எண்ணிக்கைகளை வெளியிடுகின்றது. ஒவ்வொரு தேசத்திலும் சுதேசிகளுக்கு இறுதியில் வழங்கப்படும் விசாக்களின் எண்ணிக்கை ஏற்படுத்தப்படும் பிராந்திய

மட்டுப்பாடுகள், ஒவ்வொரு தேசத்திலிருந்தும் எத்தனைபேர் விண்ணப்பம் செய்வர், எத்தனை தெரிவுபெறும் விண்ணப்பதாரிகள் வீசாவுக்குத் தகுதிபெறுவர் என்பவற்றைப் பொறுத்ததாகும். கிடைக்கக்கூடிய மொத்த வீசாக்களில் ஏழு வீதத்துக்கு மேல் எந்தவொரு தேசத்தினதும் சுதேசிகளுக்குக் கிட்டமாட்டாது.

**5. கல்வி மற்றும் வேலை அனுபவம் சம்பந்தமான நிபந்தனைத் தேவைகள் யாவை?**

அமெரிக்க குடிவரவுச் சட்டங்களும் பிரமாணங்களும் DV விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் குறைந்தது ஓர் உயர் பாடசாலைக் கல்வி அல்லது அதற்குச் சமமான கல்வி அல்லது குறைந்தது இரண்டுவருடப் பயிற்சி அல்லது அனுபவம் அவசியப்படும் ஒரு தொழிலில் கடந்த ஐந்து வருட காலத்தில் இரண்டுவருடகால வேலை அனுபவம் என்பவற்றை அவசியப்படுத்துகின்றன.
"ஓர் உயர் பாடசாலை அல்லது அதற்கு சமமான கல்வி" என்பது அமெரிக்காவில் ஒரு 12 வருட முதனிலை மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல், அல்லது வேறு ஒரு நாட்டில், அமெரிக்காவில் ஓர் உயர் பாடசாலைக் கல்வியுடன் ஒப்பிடக்கூடிய ஒரு விதிமுறையான முதனிலை மற்றும் இரண்டாம்நிலைக் கல்வியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் என்று வரைவிலக்கணப்படுத்தப்பட் டுள்ளது. விதிமுறையான கல்வி நெறிகள் மாத்திரமே இந்த நிபந்தனைத் தேவையைப் பூாத்தி செய்யும். தபால் மூல நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது அவற்றுக்குச் சமமான சான்றிதழ்கள் (பொதுச் சமப்படுத்தல் டிப்ளோமா – GED போன்றவை) ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. வீசா நேர்காணலின்போது காவற்றூது உத்தியோகத்தருக்கு கல்வி மற்றும் வேலை அனுபவம் சம்பந்தமான ஆவண நிரூபணம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**6. DV நிகழ்ச்சித் திட்டத்துக்கு தகுதிபெறும் தொழில்கள் எவை?**

அமெரிக்கத் தொழில் திணைக்களத்தின் (DOL) O*Net Online தரவுத்தளம் தகுதி வழங்கும் வேலை அனுபவத்தைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படும். O*Net Online தரவுத்தளம் வேலை அனுபவத்தை ஐந்து "வேலை வலயங்களாக" பிரிக்கின்றது. DOL இணையதளத்தில் பல தொழில்கள் நிரலிடப்பட்டுள்ள அதேவேளையில், சகல தொழில்களும் DV நிகழ்ச்சித்திட்டத்துக்குத் தகுதிபெற்று விடுவதில்லை. உங்கள் தொழில் அனுபவத்தினடிப்படையில் DV ஒன்றுக்குத் தகுதி பெறுவதாயின், வேலை வலயம் நான்கு அல்லது ஐந்து எனப் பெயரிடப்பட்டுள்ளன.

7. தொழில் திணைக்களத்தின் O*Net Online தரவுத்தளத்தில் தகுதி வழங்கும் DV தொழில்களை நான் எவ்வாறு கண்டறிவது?

நீங்கள் O*Net Online தரவுத்தளத்தில் பிரவேசிக்கும்போது. உங்கள் தொழில் தகுதியுள்ளதா என்பதைக் கண்டறிவதற்குப் பின்வரும் படிகளை எடுத்தல் வேண்டும்.

1. " Find Occupations" என்பதன் கீழ் Pull down இலிருந்து "Job Family" என்பதைத் தெரிவு செய்யவும்.

2. " Job family" இல் தேடி, உங்கள் தெரிவை மேற்கொண்டு, "Go" என்பதைக் கிளிக் செய்யவும்.

3. உங்கள் குறித்துரைத்த தொழிலுக்கான இணைப்பில் கிளிக் செய்யவும்.

4. பெயரிடப்பட்ட தொழில் வலய இலக்கத்தையும், குறித்துரைப்பான வாழ்க்கைத் தொழில் தயார் நிலை (SVP) மதிப்பீட்டு வீச்சையும் கண்டறிவதற்கு "Job Zone" என்னும் அழுத்தியைத் தெரிவு செய்யவும்.

உதாரணமாக 'Aerospace Engineers' என்பதைத் தெரிவு செய்யுங்கள். 'Aerospace Engineers' என்பதற்கான பொழிப்பு அறிக்கையின் அடியில், Job Zone பிரிவின் கீழ் designated job Zone 4, SVP Range 7.0 < 8.0 என்பவற்றைக் காணலாம். இந்த உதாரணத்தின் பிரகாரம் Aerospace Engineering என்பது ஒரு தகுதி வழங்கும் தொழிலாகும்.
மேலதிக தகவல்களுக்கு பல்வகைமை வீசா தொழில்கள் நிரல் இணையதளத்தின் பக்கத்தைப் பார்க்கவும்.

**8. E-DV நிகழ்ச்சித் திட்டத்துக்கு விண்ணப்பிக்கும் அதிகுறைவான வயது ஒன்று உள்ளதா?**

விண்ணப்பிப்பதற்கு அதிகுறைவான வயது கிடையாது, ஆயினும் விண்ணப்பத்தின்போது பிரதான விண்ணப்பதாரிக்கு உயர் பாடசாலைக்கல்வி அல்லது வேலை அனுபவம் குறித்த நிபந்தனைத் தேவை 18 வயதுக்குக் குறைந்த அனேகமான நபர்களுக்குத் தகுதி வழங்க மாட்டாது.

## DV நிகழ்ச்சித் திட்டத்துக்கான உங்கள் இலத்திரனியல் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தல்.

**9. எனது விண்ணப்பத்தை எப்பொழுது சமர்ப்பிக்கலாம்?**

DV -2015 விண்ணப்பக் காலப்பகுதி 2013 அக்டோபர் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை கிழக்குப் பகல்வேளை நேரம் (EDT) (GMT - 4) பி.ப 12.00 (மதியம்) முதல் 2013 நவம்பர் 2 ஆந் திகதி சனிக்கிழமை கிழக்குப் பகல்வேளை நேரம் (EDT) (GMT – 4) பி.ப. 12.00 (மதியம்) வரை நீடிப்பதாகும். ஒவ்வொரு வருடமும் பல பத்து லட்சக்கணக்கானோர் விண் ணப்பங்களைச் சமர்ப்பிக்கின்றனர். இத்திகதிகளுள் விண்ணப்பக் காலப் பகுதியை மட்டுப்படுத்துவது தெரிவு பெறுவோர் நேரகாலத்தோடு அறிவிக் கப்படுதல். வீசா விண்ணப்பதாரிகளுக்கும், எமது தூதரகங்களுக்கும், காவல் தூதரகங்களுக்கும் வீசா வழங்கலுக்கான தயாரிப்பு மற்றும் பூரணப் படுத்தலுக்குப் போதிய கால அவகாசம் வழங்கப்படுதல் என்பவற்றை உறுதி செய்கின்றது.

பதிவுக் காலப்பகுதியின்போது நீங்கள் விண்ணப்பிப்பது மிகச் சிறந்ததாகும். பதிவுக்காலப்பகுதி முடிவில் அதிகரித்த கேள்வி காரணமாக முறைமை தாமதமடையக் கூடும். 2013 நவம்பர் 02 ஆந் திகதி சனிக்கிழமை பிற்பகல் EDT க்குப் பின்னர் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**10. நான் அமெரிக்காவில் இருக்கின்றேன். நான் DV நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்ந்துகொள்ள முடியுமா?**

ஆம். விண்ணப்பதாரி அமெரிக்காவில் அல்லது வேறு ஒரு நாட்டில் இருக்கலாம். விண்ணப்பம் எங்கிருந்தும் சமர்ப்பிக்கப்படலாம்.

**11. பதிவுக் காலப்பகுதியின்போது ஒரு தடவை மாத்திரம்தான் விண்ணப்பிக்க முடியுமா?**

ஆம். ஒவ்வொரு பதிவுக்காலப்பகுதியின்போதும் சட்டம் ஒவ்வொரு நப ருக்கும் ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே அனுமதிக்கின்றது. பன்முக விண் ணப்பங்களைக் கண்டுபிடிப்பதற்கு இராஜாங்கத் திணைக்களம் மிகவும் முன்னேற்றகரமான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தால் நீங்கள் தகுதி யற்றவராக்கப்படுவீர்கள்.

**12. நானும் எனது வாழ்க்கைத் துணைவரும் தனித்தனியான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கமுடியுமா?**

ஆம். கணவனும், மனைவியும், ஒவ்வொருவரும் தகுதி நிபந்தனைத் தேவைகளைப் பூர்த்தி செய்தால், தனித்தனியாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம். வாழ்க்கைத் துணைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் மற்றவர் ஒருவர் வழிவருமுறையில் தங்கிவாழ்பவர் என்ற வகையில் விண்ணப்பிக்கும் உரித்தைக் கொண்டவராவார்.

**13. எனது DV விண்ணப்பத்தில் குடும்பத்தின் எந்த அங்கத்தவர்களை நான் உள்ளடக்க வேண்டும்?**

வாழ்க்கைத் துணைவர் : உங்கள் வாழ்க்கைத் துணைவர் (கணவர் அல்லது மனைவி) தற்போது உங்களுடன் வாழாவிடினும், அவர் அமெரிக்காவுக்குப் புலம்பெயர விரும்பாவிடினும், அவரது பெயரை நிரற்படுத்தல் வேண்டும். நீங்கள் சட்ட ரீதியாகப் பிரிந்து வாழாத வரையில், நீங்கள் தற்போது அவரிடமிருந்து பிரிந்து வாழ்ந்தபோதிலும் அவரது பெயரை உள்ளடக்குதல் வேண்டும். ( அதாவது ஒரு நீதிமன்றத்தால் அல்லது நீதிமன்றக் கட்டளையால் அங்கீகரிக்கப்படும் ஓர் எழுத்து மூல உடன்படிக்கை இருந்தாலொழிய). நீங்கள் சட்டபூர்வமாகப் பிரிந்திருப்பின், உங்கள் வாழ்க்கைத் துணைவரின் பெயரை உள்ளடக்கத் தேவையில்லை. நீங்கள் அவ்வாறு உள்ளடக்கியபோதிலும் நீங்கள் தண்டிக்கப்பட மாட்டீர்கள். நீங்கள் விவாகரத்துப் பெற்றிருப்பின் அல்லது உங்கள் வாழ்க்கைத் துணைவர் இறந்துவிட்டால் உங்கள் முன்னாள் வாழ்க்கைத் துணைவரின் பெயரை உள்ளடக்கத் தேவையில்லை.

பிள்ளைகள் : இயற்கையாக உங்களுக்குப் பிறந்த பிள்ளையாயினும் சரி, உங்கள் பெறா மக்களாக இருந்தாலும் சரி (நீங்கள் இப்பொழுது அப்பிள்ளையின் பெற்றவரை விவாகரத்து செய்திருந்தாலும் சரி) உங்கள் வாழ்க்கைத் துணைவரின் பிள்ளையாக இருந்தாலும் சரி அல்லது உங்கள் நாட்டின் சட்டங்களின் பிரகாரம் நீங்கள் விதிமுறையாக சுவீகாரம் எடுத்த பிள்ளையாக இருந்தாலும் சரி திருமணம் செய்யாத, 21 வயதுக்குக் குறைந்த உயிருடனுள்ள சலக பிள்ளைகளையும் உங்கள் ஆரம்ப E-DV விண்ணப்பத்தில் நிரலிடுதல் வேண்டும். அவர்கள் தற்போது உங்களுடன் வசிக்காவிட்டாலும் சரி, DV நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அவர்கள் புலம்பெயர்வது குறித்து நீங்கள் சிந்திக்காதுவிட்டாலும் சரி, உங்கள் இலத்திரனியல் நுழைவுப்படிவ 21 வயதுக்குக் குறைந்த சகல பிள்ளைகளையும் நிரலிடவும். ஏற்கனவே அமெரிக்கப் பிரஜைகளாகவுள்ள அல்லது சட்டரீதியாக நிரந்தர வதிவாளர்களாகவுள்ள பிள்ளைகளை நிரலிடத் தேவையில்லை. அவ்வாறு நீங்கள் செய்தாலும் நீங்கள் தண்டிக்கப்பட மாட்டீர்கள்.

பெற்றோர்களும். சகோதரர்களும் DV விசாக்களைப் பெறுவதற்குத் தகுதியற்றோராவர். அவர்களை உங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்குதல் ஆகாது. நீங்கள் குடும்ப அங்கத்தினர்களை உள்ளடக்கினால், அவர்கள் ஒரு வீசாவுக்கு விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் புலம்பெயரவோ, உங்களுடன் பிரயாணம் செய்யவோ அவசியமில்லை. எவ்வாறாயினும், உங்கள் ஆரம்ப நுழைவுப்படிவத்தில் ஒரு தகுதிவாய்ந்த தங்கிநிற்பவரை நீங்கள் உள்ளடக்கத் தவறினால், பின்னர் உங்கள் வீசா விண்ணப்பப் படிவங்களில் அவர்களின் பெயரை உள்ளடக்கினால், உங்கள் விடயம் தகுதியற்றதாகும். உங்களில் எவருக்கும் வீசா கிடைக்கமாட்டாது. இது ஆரம்ப விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் குடும்ப அங்கத்தினர்களாக இருந்தோருக்கு மாத்திரம் பொருந்துவதாகும். பின்னர் சேர்த்துக் கொண்டவர்களுக்கு பொருந்தமாட்டாது. உங்கள் வாழ்க்கைத் துணைவருக்கு விண்ணப்பிக்கும் தகுதியிருந்தால், அவரின் பெயர் உங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பினும். இரண்டு விண்ணப்பங்களும் உங்கள் குடும்பத்திலுள்ள தங்கி வாழ்வோரின் விபரங்களைக் கொண்டிருக்கும் வரையில், ஒரு தனியான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.

### 14. நானே எனது சொந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டுமா, அல்லது வேறொருவர் என் சார்பில் அதைச் சமர்ப்பிக்க முடியுமா?

நீங்களே உங்கள் விண்ணப்பத்தைத் தயாரித்து, சமர்ப்பிப்பதே மிகச் சிறப்பானதாகும். ஆனால், சில வேளைகளில் உங்களுக்காக வேறொருவர் அதனைச் சமர்ப்பிக்க முடியும். நீங்கள் உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தாலோ அல்லது ஒரு சட்டத்தரணி, நண்பர் அல்லது உறவினர் உங்கள் சார்பில் அதனைச் சமர்ப்பித்தாலோ, உங்கள் பெயரில் ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பதாரி என்ற வகையில் நீங்கள் அதற்கு பொறுப்புடையவராவீர்கள். இவ் விண்ணப்பத்தின் தகவல்கள் அனைத்தும் முழுமையாகவும், சரியாகவும் அமைய வேண்டும். தவறான தகவல்களைக் கொண்ட அல்லது முழுமை பெறாத விண்ணப்பப் படிவங்கள் தகைமையற்றவையாக நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரிகள் தமது உறுதி இலக்கத்தை தாமே வைத்திருக்க வேண்டும். தமது விண்ணப்பத்தின் நிலையை www.dvlottery.state.gov என்னும் இணைய தளத்தில் செவ்வை பார்க்க முடியும்.

### 15. நான் ஏற்கனவே வேறோரு வகைப் பிரிவில் ஒரு குடியேற்ற வீசாவுக்குப் பதிவு பெற்றுள்ளேன், அவ்வாறு இருந்தாலும் நான் DV நிகழ்ச்சித்திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியுமா?

ஆம்

### 16. E-DV எப்பொழுது கணினி மூலம் கிட்டும்?

2013 அக்டோபர் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை கிழக்குப் பகல்வேளை நேரம் (EDT) (GMT - 4) ப 12.00 (மதியம்) ஆரம்பித்து 2013 நவம்பர் 2 ஆந் திகதி சனிக்கிழமை கிழக்குப் பகல்வேளை நேரம் (EDT) (GMT – 4) பி.ப. 12.00 (மதியம்) முடிவடையும். பதிவுக்காலப்பகுதியின்போது நீங்கள் கணினி மூலம் விண்ணப்பிக்கலாம்.

### 17. நான் EDV நுழைவுப்படிவத்தை word processing நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினுள் தரவிறக்கம் செய்து, அதைப் பின்னர் பூரணப்படுத்தலாமா?

இல்லை, பின்னர் பூரணப்படுத்தி சமர்ப்பிப்பதற்காக நீங்கள் வேறோர் நிகழ்ச்சித் திட்டத்தினுள் இப்படிவத்தை சேமித்து வைக்க முடியாது. E-DV நுழைவுப் படிவம் ஒரு இணையதள படிவம் மாத்திரமேயாகும். நீங்கள்

கணினியைக் கையாளும்போதே தகவலைப் பூர்த்திசெய்து, சமர்ப்பிக்கவேண்டும்.

**18. நான் படிவத்தைக் கணினியில் சேமித்து அதைப் பின்னர் பூரணப்படுத்த முடியுமா?**

இல்லை, E-DV நுழைவுப்படிவம் ஒரே நேரத்தில் பூரணப்படுத்தி, சமர்ப்பிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதாகும். நீங்கள் படிவத்தை தரவிறக்கம் செய்வதிலிருந்து, பூரணப்படுத்தி உங்கள் நுழைவை E-DV இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் வரையில் அறுபது (60) நிமிடங்களே வழங்கப்படும். நீங்கள் 60 நிமிட எல்லைக்குமேல் சென்றால் உங்கள் பூரண நுழைவை இலத்திரனியல் ரீதியாகச் சமர்ப்பிக்க முடியாவிடில், ஏற்கனவே பதியப்பட்ட தகவல் கவனிக்கப்படாமல்விடப்படும். முறைமைப் பகுதி பூரணமான நுழைவுகளை அழித்துவிடும். அவை பின்னர் இடம்பெறும் பூரணமான நுழைவுகளின் பிரதியாகத் தற்செயலாக காணப்படுவதைத் தடுக்கும் வகையிலேயே இது இடம்பெறுகின்றது. கணினியில் ஒரு படிவத்தைப் பூரணப்படுத்த ஆரம்பிக்கும் முன்னர், DV அறிவுறுத்தல்களைப் பூரணமாக வாசித்து, உங்களுக்கு அவசியமான தகவல்களை அறிந்துகொள்ளவும்.

**19. என்னிடம் ஸ்கானர் ஒன்று இல்லை. எனது நுழைவில் பயன்படுத்துவதற்காக எனது புகைப்படங்களை ஸ்கான் செய்து சேமித்து அவற்றை மீண்டும் எமக்கு மெயில் செய்வதற்கு அவற்றை அமெரிக்காவிலுள்ள எவருக்காவது அனுப்பலாமா?**

அறிவுறுத்தல்களிலுள்ள நிபந்தனைத் தேவைகளை அவை நிறைவேற்றும் வரையில், E-DV கணினி நுழைவுடன் ஒரே நேரத்தில் இலத்திரனியல் ரீதியில் சமர்ப்பிக்கப்பட்டால் அவ்வாறு செய்ய முடியும். நுழைவைக் கணினி மூலம் சமர்ப்பிக்கும்போது, நீங்கள் ஸ்கான் செய்யப்பட்ட புகைப்படக் கோப்பை வைத்திருக்க வேண்டும். அதைக் கணினி விண்ணப்பத்திலிருந்து பிரித்து, தனியாகச் சமர்ப்பிக்க முடியாது. பூரணமான நுழைவும் (புகைப்படமும், விண்ணப்பமும் சேர்த்து) அமெரிக்காவிலிருந்து அல்லது வெளிநாட்டிலிருந்து இலத்திரனியல் ரீதியில் சமர்ப்பிக்கப்படலாம்.

**20. நடவடிக்கை முறைகளின் பிரகாரம் எனது புகைப்படங்கள் குறித்துரைப்புகளுடன் இணங்காவிடில் முறைமை எனது E-DV நுழைவுப்படிவத்தை நிராகரித்துவிடும். நான் எனது நுழைவுப்படிவத்தை மீண்டும் சமர்ப்பிக்கலாமா?**

ஆம். உங்கள் புகைப்படங்கள் குறித்துரைப்புகளுடன் இணங்காவிடில். உங்கள் நுழைவுப்படிவத்தை E-DV இணையதளம் ஏற்றுக்கொள்ளமாட்டாது. ஆகவே, உங்களுக்கு ஓர் உறுதிப்படுத்தல் அறிவித்தல் கிடைக்காது எவ்வாறாயினும், இணையத்தின் முன்கூறமுடியாத தன்மைகளைப் பார்க்கும்போது, உங்களுக்கு நிராகரிப்பு அறிவித்தல் உடனடியாகவே கிடைக்காமல் போகலாம். நீங்கள் புகைப்படங்களைத் திருத்தி 60 நிமிடங்களுள் படிவத்தின் பகுதி ஒன்றை அல்லது இரண்டை மீண்டும் அனுப்பி வைத்தால் நீங்கள் நுழைவுப்படிவத்தை வெற்றிகரமாகச் சமர்ப்பிக்கலாம். இல்லையெனில், நீங்கள் நுழைவுச் செயல்முறை முழுவதையும் மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். நீங்கள் அவசியப்படுவதுபோன்று பல தடவைகள் ஒரு விண்ணப்பத்தை அனுப்ப முயற்சித்து, ஒரு பூரணமான விண்ணப்பத்தை பெறவைத்து உறுதிப்படுத்தல் அறிவித்தலொன்று கிடைத்ததும், நீங்கள் நுழைவு விண்ணப்பம் பூரணமடைவதால், நீங்கள் மேலதிக நுழைவு விண்ணப்பம் எதையும் அனுப்பத் தேவையில்லை.

**21. எனது நுழைவுப்படிவத்தை சமர்ப்பித்து எவ்வளவு காலத்துக்குப் பின்னர் இரத்திரனியல் உறுதி அறிவித்தல் எனக்குக் கிடைக்கும்?**

உறுதி அறிவித்தலும், தனிச்சிறப்பான உறுதி இலக்கமும் உடனடியாகவே உங்களுக்குக் கிடைக்கும். இந்த இலக்கத்தை நீங்கள் பதிவு செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

## தெரிவு

**22. நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன் என்பதை எவ்வாறு அறிந்துகொள்வது?**

2014 மே 01 முதல் செப்டெம்பர் 2015 வரை E-DV இணையதளத்தில் www.dvlottery.state.gov இல் உள்ள நுழைவோர் அந்தஸ்து செவ்வைப் பார்த்தலில் உங்கள் DV-2015 நுழைவோர் அந்தஸ்தைச் செவ்வைப் பார்த்துக்கொள்ளலாம். நுழைவோர் அந்தஸ்து செவ்வைப் பார்த்தலே நீங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளீர்களா உங்கள் வீசா விண்ணப்பம் சம்பந்த மான மேலதிகத் தகவல்கள் உள்ளனவா, உங்கள் குடியேறுவோர் வீசா நேர்காணல் குறித்த திகதி மற்றும் நேரம் என்பவற்றை உங்களுக்கு அறி விக்கும் ஒரேயொரு வழிவகை ஆகும். பல்வகைமை விசா நிகழ்ச்சித் திட் டத்தில் உத்தியோகபூர்வமாகக் கணினி மூலம் பிரவேசிப்பதற்கும், நுழை வோர் அந்தஸ்து செவ்வைப்பார்த்தலுக்குமான ஒரேயொரு அதிகார அங்கீ காரம்பெற்ற இராஜாங்கத் திணைக்கள இணையதளம் www.dvlottery.state.gov ஆகும்.

இராஜாங்கத் திணைக்களம் நீங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறித்து அறிவிப்பதற்கு உங்களுடன் தொடர்புகொள்ள மாட்டாது.

**23. நான் தெரிவுசெய்யப்படவில்லை என்பதை எவ்வாறு அறிந்துகொள்வது? எனக்கு அறிவிக்கப்படுமா?**

2014 மே 01 ஆந் திகதி முதல் 2015 ஜூன் 30 வரை www.dvlottery.state.gov E-DV இணையதளத்தில் நுழைவோர் அந்தஸ்து செவ்வைப்பார்த்தல் மூலமாக உங்கள் DV-2015 நுழைவு அந்தஸ்து குறித்து செவ்வைப்பார்த்துக் கொள்ளலாம். உங்கள் உறுதி இலக்கத்தை 2015 செப்டெம்பர் 30 வரை யாவது வைத்துக்கொள்ளவும். (முதல் வருடத்தின் DV-2014 அந்தஸ்து தகவல் 2013 மே 1 முதல் 2014 ஜூன் 30 வரை கணினியில் கிட்டும்) உங்கள் நுழைவுப் படிவம் தெரிவுசெய்யப்படாவிடில் வேறு மேலதிகத் தகவல் எதுவும் உங்களுக்குக் கிட்டமாட்டாது.

**24. எனது உறுதி இலக்கம் தொலைந்துவிட்டால் என்ன செய்வது?**

நீங்கள் நுழைவோர் அந்தஸ்து செவ்வை பார்த்தலை அணுகுவதற்கு உங்கள் உறுதி இலக்கத்தை வைத்திருத்தல் வேண்டும். நீங்கள் பதிவுசெய்த ஈ-மெயில் முகவரியூடாக உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் சில தனிப்பட்ட தகவல்களை வழங்குவதன்மூலம் E-DV இணையதளத்தில் நுழைவோர் அந்தஸ்து செவ்வைப் பார்த்தலில், (ESC) உங்கள் உறுதி இலக்கத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு இப்பொழுது ஒரு கைக்கருவி உள்ளது.

(ESC மீளப்பெறல் கைக்கருவி மூலமாகவன்றி, அமெரிக்க தூதரங்களோ, காவல் தூதரங்களோ, அல்லது கென்டக்கி காவல் தூதரக நிலையமோ உங் கள் தெரிவு அந்தஸ்தைச் செவ்வைபார்க்கவோ, உங்கள் உறுதி இலக்கத்தை வழங்கவோ முடியாதவையாகும். இராஜாங்கத் திணைக்களம் வீசா செயல்

முறையைத் தொடரும் வகையில் தெரிவுசெய்யப்பட்டோரின் நிரலொன்றை வழங்கமுடியாதநிலை உள்ளது.

## 25. எனக்கு இராஜாங்கத் திணைக்களத்திலிருந்து தகவல் கிட்டுவது ஈ-மெயில் மூலமா அல்லது அஞ்சல் மெயில் மூலமா?

இராஜாங்கத் திணைக்களம் உங்களுக்கு ஓர் அறிவித்தல் கடிதத்தை அனுப்பிவைக்கமாட்டாது. அமெரிக்க அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தனிநபர்களுக்கு அறிவிப்பதற்கு ஒருபொழுதும் ஈ-மெயில்களை அனுப்பியதில்லை. DV -2015 நிகழ்ச்சித் திட்டத்திலும் இந்தநோக்கத்துக்காக ஈ-மெயிலைப் பயன்படுத்தும் திட்டம் எதுவுமில்லை. நீங்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தால் நுழைவோர் அந்தஸ்து செவ்வைப் பார்த்தலில் அறிவித்தல் அறிவுறுத்தல்களுக்கு நீங்கள் பதிலளித்த பின்னரே உங்கள் வீசா நேர்காணல் சம்பந்தமான ஈ-மெயில் தொடர்பாடலை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். இந்த ஈ-மெயில்களில் உண்மையான நேர்முகத் திகதி மற்றும் நேரம் சம்பந்தமான தகவல் எதுவும் இருக்க மாட்டாது. விபரங்களை அறிந்துகொள்வதற்கு நீங்கள் நுழைவோர் அந்தஸ்து செவ்வைப்பார்த்தலை அணுகுதல் வேண்டும்.

“ gov “ மேலாண்மை விகுதி கொண்ட இணையத்தளங்கள் மாத்திரமே உத்தியோகபூர்வ, அமெரிக்க அரசாங்க இணையதளங்கள் ஆகும். வேறு பல இணைய தளங்கள் (உ-ம்- மேலாண்மை விகுதிகள் “com’’, “.org” அல்லது “net” போன்றவை) குடிவரவு மற்றும் வீசா சம்பந்தமான விபரங்களை வழங்குபவை ஆகும். இராஜாங்கத் திணைக்களம் இந்த ஏனைய இணைய தளங்களில் அங்கீகாரம், பரிந்துரை அல்லது அனுசரணை சம்பந்தமான எதுவித தகவல்களையோ, விடயங்களையோ வழங்குவதில்லை.

பணம் மற்றும் உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் ஏமாற்றாக உங்களைத் தூண்டும் ஈ-மெயில்கள் வேறு இணையதளங்களிலிருந்து உங்களுக்கு வரக்கூடும். இராஜாங்கத் திணைக்கள இணையதளங்களில் அல்லது அமெரிக்கத் தூதரக அல்லது காவல் தூதரக இணையதளங்களில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்கள் மற்றும் குடியேற்ற நடவடிக்கை முறைத் தகவல்களுக்குப் பணம் செலுத்துமாறு உங்களை இவை கேட்கக்கூடும். அத்தோடு, DV தொடர்பிலான சேவைகளுக்காக கட்டணங்கள் விதித்து உங்கள் பணத்தைக் கொள்ளையிடுவதற்கு அமைப்புகளும், இணையதளங்களும் முயலக்கூடும். நீங்கள் இந்த ஏமாற்று வேலைகளுக்குப் பணம் அனுப்பினால், பின்னர் அது ஒருபொழுதும் உங்களுக்குத் திரும்பிவராது. அடையாள மோசடி / களவுகளுக்குப் பயன்படும் என்பதால் இந்த இணைய தளங்களுக்கு உங்கள் தனிப்பட்ட தகவல்களை அனுப்ப வேண்டாம்.

## 26. DV – 2015 க்கு எத்தனைபேர் தெரிவுசெய்யப்படுவார்கள்?

DV -2015 க்கு 50,000 விசாக்கள் கிடைக்கும். தெரிவுசெய்யப்படும் முதல் 50,000 நபர்கள் அனைவருமே வீசாவுக்குத் தகுதிபெற மாட்டார்கள் என்பதாலும், வீசா வழங்குவது தொடர்பில் அவர்களின் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா என்பதாலும் கிடைக்கக்கூடிய 50,000 வீசாக்களையும் வழங்குவதை உறுதிசெய்வதற்காக 50,000 இற்கும் மேற்பட்ட நுழைவுப் படிவங்கள் தெரிவு செய்யப்படும். எவ்வாறாயினும், இது ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள் அனைவருக்கும் வழங்கக்கூடிய விதத்தில் போதிய வீசாக்கள் இல்லாத நிலை எழக்கூடும் என்பதையும் கருதுகின்றது.

மேலும் செயன்முறைப்படுத்துவதற்காக நீங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளீர்களா என்பதையும், நிரலில் உங்கள் இடத்தையும் அறிந்துகொள்வதற்கு நீங்கள் E-DV இணையதளத்தின் நுழைவோர் அந்தஸ்து செவ்வைபார்த்தலில் செவ்வை பார்த்துக்கொள்ளலாம். அறிவிப்பு அறிவுறுத்தல்களில் கேட்கப்பட்டவாறு நேர்காணலுக்கு முன்னரான ஆவணங்களையும் மற்றும் ஏனைய தகவல்களையும் சமர்ப்பித்து 'தெரிவுபெற்றோருக்காகிய DV-2015 நிகழ்ச்சித் திட்ட நேர்காணல்கள் 2014 அக்டோபரில் ஆரம்பமாகும். அவசியமான சகல தகவல்களையும் வழங்கி. தெரிவுசெய்யப்பட்டோருக்கு E-DV இணையதளத்தில் நுழைவோர் அந்தஸ்து செவ்வைப்பார்த்தலூடாக அவர்களின் வீசா நேர்காணல் நேர நியமனம் சம்பந்தமாக அறிவிக்கப்படும். வெளிநாட்டு நிலையங்களிலுள்ள அமெரிக்க காவல் தூதரக அதிகாரி களுடன் அட்டவணைப்படுத்தப்படும் இந்த நேர்காணல்கள் குறித்து நான்கு முதல் ஆறு வாரங்களுக்கு முன்னராக அறிவிக்கப்படும். வீசா இலக்கம் கிடைக்கக்கூடிய நிலையில், ஒவ்வொரு மாதமும், அந்த மாதம் வீசா வழங்குவதற்குத் தயார் நிலையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு வீசாக்கள் வழங்கப்படும். சகல 50,000 DV வீசாக்களும் வழங்கப்பட்ட பின்னர், நிகழ்ச்சித்திட்டம் நிறைவடையும். கோட்பாட்டளவில் வீசா எண்ணிக்கைகள் 2015 செப்டெம்பருக்கு முன்னால் முடிவடையும். வீசா பெறவிரும்பும் தெரிவு செய்யப்பட்டோர் தமது விடயம் சம்பந்தமாக உடனடியாகச் செயற்படு வதற்குத் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். **எழுந்தமானமாக நீங்கள் தெரிவுசெய்யப்படுவது, வீசா கிடைப்பதற்கான உத்தரவாதமாகமாட்டாது. தெரிவு என்பதன் கருத்து நீங்கள் பல்வகைமை வீசாவொன்றுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியானவர், மற்றும் உரிய தகைமை பெற்றிருப்பின், உங்களுக்குப் பல்வகைமை வீசா கிடைக்கும் என்பதாகும். தகைமை பெறுவதற்கு, முதலில் தெரிவுசெய்யப்படும் 50,000 விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே வீசாக்கள் கிடைக்கும்.**

**27. நுழைவில் வெற்றியாளர்கள் எவ்வாறு தெரிவுசெய்யப்படுவர்?**

**தெரிவுகுறித்த உத்தியோகப்பூர்வ அறிவித்தல்கள் நுழைவோர் அந்தஸ்து செவ்வைப்பார்த்தலூடாக மேற்கொள்ளப்படும். இது 2014 மே 01 இலிருந்து 2015 ஜுன் 30 வரை www.dvlottery.state.gov E-DV இணைய தளத்தில் பார்க்கக்கூடியதாகும். இராஜாங்கத் திணைக்களம் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு அறிவித்தல்களையோ, கடிதங்களையோ கிரமமான அஞ்சல் மெயிலிலோ ஈ-மெயிலிலோ அனுப்புவதில்லை. DV ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளீர்கள் என்று தெரிவிக்கும் ஏதாவது ஈ-மெயில் அறிவித்தலோ அல்லது அஞ்சல் கடிதமோ இராஜாங்கத் திணைக்களத்திலிருந்து கிடைப்பதில்லை என்பதோடு அது சட்டநிலைத்தகவற்றதாகும். இராஜாங்கத் திணைக்களத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஏதாவது தொடர்பாடல் உங்கள் விண்ணப்பம் தொடர் பிலான புதிய தகவலைப் பெற்றுக்கொள்வதற்கு நுழைவோர் அந்தஸ்து செவ்வைப் பார்த்தலை மீள்பார்வையிடுமாறு உங்களை அறிவுறுத்தும் இரா ஜாங்கத் திணைக்களம் அஞ்சல் மூலம் அல்லது Western Union போன்ற சேவைகளூடாகப் பணம் அனுப்புமாறு உங்களை ஒருபோதும் கேட்க மாட்டாது.**

ஒவ்வொரு பிராந்தியத்திலுமிருந்தும் கிடைக்கும் சகல நுழைவுப் படிவங்களும் தனித்தனியாக இலக்கமிடப்பட்டு நுழைவுக்காலப்பகுதி முடிவில், கிடைத்த நுழைவுப்படிவங்களிலிருந்து கணினியொன்று ஒவ்வொரு புவியியல் பிராந்தி யத்துக்குமான நுழைவுப் படிவங்களை எழுந்தமானமாகத் தெரிவுசெய்யும். ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் இவ்வாறு எழுந்தமானமாகத் தெரிவுசெய்யப்படும் முதலாவது நுழைவுப் படிவம் முதலாவது விடயமாகப் பதியப்படும். இரண்டாவதாக தெரிவுசெய்யப்படும் நுழைவுப்படிவம் இரண்டாவது விடயமாக தெரிவுசெய்யப்பட்டு இவ்வாறாக நடவடிக்கைத் தொடரும். நுழைவுக் காலப்பகுதியின்போது ஒவ்வொரு

பிராந்தியத்திலிருந்தும் கிடைக்கப்பெறும் சகல நுழைவுப் படிவங்களும் தெரிவுசெய்யப்படுவதற்கான சமமான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்ளும். ஒரு நுழைவுப்படிவம் தெரிவுசெய்யப்படும்போது நுழைபவருக்கு அவரது தெரிவு குறித்து www.dvlottery.state.gov E-DV இணையதளத்தில் 2014 மே 01 ஆந் திகதி முதல் நுழைவோர் அந்தஸ்து செவ்வைப்பார்த்தலூடாக அறிவிக்கப்படும். நீங்கள் தெரிவுசெய்யப்பட்டு கணினியில் நுழைவோர் அந்தஸ்து செவ்வைப்பார்த்தலூடாகக் கிடைக்கும் அறிவுறுத்தல்களுக்குப் பதிலளித்தால், இராஜாங்கத் திணைக்களத்தின் கென்டக்கி காவல் தூதர் நிலையம் (KCC) உங்கள் விடயத்தைச் செயன்முறைப்படுத்தி தெரிவுசெய்யப்பட்டோர் அமெரிக்கத் தூதரகத்தில் அல்லது காவல் தூதரகத்தில் வீசா நேர்காணலுக்குத் தோற்றுமாறு அறிவுறுத்தப்படுவர். அமெரிக்காவில் உள்ளவர்கள் தமது அந்தஸ்தை சீராக்கம் செய்வதற்கு விண்ணப் பித்தால் அதை ஓர் உள்நாட்டு USCIS அலுவலகத்துக்கு மேற்கொள்ளுதல் வேண்டும்.

**28. நான் ஏற்கனவே அமெரிக்காவில் இருக்கின்றேன். நான் தெரிவு செய்யப்பட்டால், USCIS உடன் தொடர்புகொண்டு எனது அந்தஸ்தை மாற்றிக்கொள்ள முடியுமா?**

நீங்கள் INA யின் 245 ஆம் பிரிவின் நிபந்தனைகளின் கீழ் அந்தஸ்தை சீராக்கம் செய்யும் தகுதியைக் கொண்டிருந்தால் இது சாத்தியமாகும். நிரந்தர வதிவாளராக உங்கள் அந்தஸ்தை மாற்றுமாறு கோரி நீங்கள் USCIS க்கு விண்ணப்பிக்கலாம். 2015 செப்டெம்பர் 30 இல் DV-2015 நிகழ்ச்சித்திட்டம் முடிவடைவதால் அதற்கு முன்னராக USCIS வெளிநாட்டு வாழ்க்கைத் துணைவர் அல்லது 21 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் சம்பந்தமான விடயங்களை செயன்முறைப்படுத்தல் உள்ளிட்ட வகையில் உங்கள் விடயத்தில் நடவடிக்கையை பூர்த்திசெய்யக்கூடிய முறையில் விடயங்களை உறுதிசெய்துகொள்ளுதல் வேண்டும். எந்த சூழ்நிலைகளின் கீழும் 2015 செப்டெம்பர் 30 EDT நடுநிசிக்குப் பின்னர் DV-2015 நிகழ்ச் சித்திட்டத்தில் வீசா இலக்க மாற்றங்களோ அந்தஸ்து சீராக்கல்களோ இடம்பெறமாட்டா.

**29. நான் தெரிவுசெய்யப்பட்டால், எவ்வளவு காலத்துக்கு நான் பல்வகைமை வீசாவுக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துள்ளது?**

நீங்கள் Dv -2015 நிகழ்ச்சித் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டால் 2014 அக்டோபர் 01 இலிருந்து 2015 செப்டெம்பர்வரை நீடிக்கும் அமெரிக்க அரசாங்க நிதியாண்டு 2015 இன்போது மாத்திரமே நீங்கள் வீசாவுக்காக விண்ணப்பிக்கும் உரித்தைக் கொண்டுள்ளீர்கள்

**எவ்வித விதிவிலக்குமின்றி, தெரிவுசெய்யப்பட்ட தகுதிவாய்ந்த விண்ணப் பதாரிகள் அனைவரும் தமது வீசாக்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண் டும் அல்லது தமது அந்தஸ்தை சீராக்கல் செய்துகொள்ளுதல் வேண்டும்.**

தெரிவுசெய்யப்பட்ட நபர்கள் 2015 செப்டெம்பர் 30 இற்கு முன்னர் (நிதியாண்டின் முடிவு) வீசாக்களைப் பெற்றுக்கொள்ளாதோர் விடயத்தில் DV அனுகூலங்கள் அடுத்த வருடத்துக்குக் கொண்டு செல்லப்படமாட்டாது. DV-2015 பதிவின் கீழ் அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ளும் வாழ்க்கைத் துணைவர்களும் பிள்ளைகளும் 2014 அக்டோபர் 01 இற்கும் 2015 செப்டெம்பர் 30 இற்குமிடையில் மாத்திரமே DV வகைப்பிரிவு வீசாக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வெளிநாடுகளிலிருந்து விண்ணப்பித்தோர் திணைக்களத்திடமிருந்து நேர நியமன அறிவித்தலை E-DV இணையதளத்தின் நுழைவோர் அந்தஸ்து செவ்வைபார்த்தலூடாகப்

பெற்றுக்கொள்வர் . இது அட்டவணைப்படுத்தப்பட்ட நேர நியமனங்களுக்கு 4 முதல் 6 வாரங்களுக்கு முன்னராக இடம்பெறும்.

**30. DV தெரிவுபெற்ற ஒருவர் மரணமடைந்தால் அவரின் விடயத்துக்கு என்ன நிகழும்?**

DV தெரிவுபெற்ற ஒருவர் அமெரிக்காவுக்குப் பிரயாணம் செய்வதற்கு முன்னர் எந்த நேரத்திலும் மரணமடைந்தால் DV விடய நிகழ்வு தானாகவே முடிவடைந்துவிடும். எவராவது தெரிவுபெற்று மரணமுற்றவரின் தகுதிவாய்ந்த வழிவருநிலை வாழ்க்கைத் துணைவர் மற்றும்/பிள்ளைகள் DV வீசாவொன்றுக்கு உரித்துள்ளவர்களாக மாட்டார்கள்.

**கட்டணங்கள்**

**31. E-DV நிகழ்ச்சித்திட்டத்தில் பிரவேசிப்பதற்கு எவ்வளவு ஆகுசெலவு ஆகும்?**

தற்போது ஓர் இலத்திரனியல் நுழைவுப்படிவத்தை சமர்ப்பிப்பதற்கு கட்டணம் எதுவும் இல்லை. எவ்வாறாயினும் நீங்கள் தெரிவுசெய்யப்பட்டு பல்வகைமை வீசாவொன்றுக்கு விண்ணப்பம் செய்வதாயின், அவ்வேளையில் தேவையான சகல வீசா மற்றும் நேர்காணல் கட்டணங்களையும் செலுத்துதல் வேண்டும். இதை அமெரிக்கத் தூதரகத்தில் அல்லது காவல் தூதரகத்தில் காவல் தூதுவரின் காசாளரிடம் நேரடியாக செலுத்துதல் வேண்டும். நீங்கள் ஏற்கனவே அமெரிக்காவில் இருப்பவராயின். நீங்கள் தெரிவுசெய்யப்பட் டிருப்பின், அந்தஸ்து சீராக்கலுக்கு USCIS க்கு விண்ணப்பிப்பதாயின் நீங்கள் அவசியமான சகல கட்டணங்களையும் USCIS க்கு நேரடியாக செலுத்துதல் வேண்டும். நீங்கள் தெரிவு செய்யப்பட்டால், அவசியமான DV மற்றும் குடியேற்ற வீசா கட்டணங்கள் குறித்த விபரங்கள் www. dvlottery.state.gov EDV இணையதளத்தினூடாக உங்களுக்கு வழங்கப்படும்.

**32. நான் தெரிவுசெய்யப்பட்டால் DV மற்றும் குடியேற்ற வீசாக் கட்டணங்களை எவ்வாறு, எங்கே செலுத்துதல் வேண்டும்?**

நீங்கள் எழுந்தமானமாகத் தெரிவுசெய்யப்பட்டு நுழைபவராயின் www. dvlottery.state.gov இணையதளத்தில் நுழைவோர் அந்தஸ்து செவ்வைபார்த்தலூடாக DV வீசா விண்ணப்பச்செயல்முறை சம்பந்தமான அறிவுறுத்தல்கள் கிடைக்கும். வீசாவுக்கு விண்ணப்பிக்கும் காலத்தில் சகல DV மற்றும் குடியேற்ற வீசாக்கட்டணங்களை நீங்கள் நேரடியாக அமெரிக்கத் தூதரகத்தில் அல்லது காவல் தூதரகத்தில் மாத்திரமே செலுத்த வேண்டும். காவல் தூதரக காசாளர் உங்கள் கொடுப்பனவுக்கான அமெரிக்க அரசாங்கத்தின் பற்றுச்சீட்டை உடனடியாகவே வழங்குவார். நீங்கள் குடியேற்ற வீசாவொன்றுக்கு அமெரிக்க தூதரகத்துக்கு அல்லது காவல் தூதரகத்துக்கு விண்ணப்பிப்பதாயின், அஞ்சலில், Western Union மூலமாக அல்லது வேறு ஏதாவது விநியோக சேவை மூலமாக எவருக்கும் DV கட்டணத்துக்கான பணத்தை அனுப்பவேண்டாம். நீங்கள் தெரிவு பெற்றிருந்தால், நீங்கள் ஏற்கனவே அமெரிக்காவில் இருந்தால், USCIS அமைப்புக்கு அந்தஸ்து சீராக்கலுக்கு விண்ணப்பிப்பதாயின் www.dvlottery.state.gov இணையதளத்தின் நுழைவோர் அந்தஸ்து செவ்வைப்பார்த்தல் மூலம் வழங்கப்படும் அமெரிக்க வங்கியொன்றுக்கு எவ்வாறு DV கட்டணத்தை அனுப்பலாம் என்பது குறித்த தனியான அறிவுறுத்தல் பக்கத்தை பார்வையிடலாம்.

**33. நான் DV ஒன்றுக்கு விண்ணப்பித்து, அதைப் பெற்றுக்கொள்ளும் தகுதி இல்லாவிடின் நான் செலுத்திய வீசா கட்டணங்கள் மீளளிக்கப்படுமா?**

இல்லை. வீசா கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இந்த அறிவுறுத் தல்களில் வழங்கப்பட்டுள்ள விபரங்களின் பிரகாரம் நீங்கள் சகல தகைமை களையும் கொண்டிருத்தல் வேண்டும். காவல் தூதரக உத்தியோகத்தர் ஒரு வர் வீசாவுக்கான நிபந்தனைத் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்ய வில்லையென்று தீர்மானிக்கும் பட்சத்தில் அல்லது நீங்கள் அமெரிக்க சட் டத்தின் கீழ் DV பெற்றுக்கொள்வதற்கு வேறு வழிகளில் தகுதியற்றவர் என்று தீர்மானிக்கப்பட்டால், இந்த உத்தியோகத்தர் உங்களுக்கு வீசா வழங்க முடியாது. நீங்கள் செலுத்திய சகல வீசாக் கட்டணங்களும் திருப்பி செலுத்தப்படமாட்டாது. அவற்றை இழக்க நேரிடும்.

## தகுதியீனங்கள்

**34. ஒரு DV விண்ணப்பதாரி என்ற முறையில் வீசா தகுதியீனம் குறித்த ஏதாவது காரணங்களிலிருந்து எனக்கு விளக்கமளிக்க முடியுமா? விளக்கமளிக்குமாறு கேட்டு நான்செய்யும் விண்ணப்பம் ஏதாவது விசேட பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா?**

இல்லை. DV விண்ணப்பதாரிக்கு குடியேற்றம் மற்றும் தேசியம் குறித்த சட்டத்தில் (INA) குறித்துரைக்கப்பட்டுள்ள குடியேற்ற வீசா சம்பந்தமான சகல தகுதியீனங்களும் பொருந்துவனவாகும். INA யில் சாதாரணமாக வழங்கப் பட்டுள்ள ஏற்பாடுகள் தவிர, வீசா தகுதியீனங்களுக்கான காரணங்களுக்கு விளக்கமளிக்கும் எந்த விசேட ஏற்பாடுகளும் இல்லை. விளக்கமளித்தல் குறித்த வேண்டுகோளை பரிசீலிக்கும் எந்த விசேட நடைமுறையும் கிடையாது. அமெரிக்கப் பிரஜைகளின் அல்லது சட்டரீதியான நிரந்தர வதிவாளர்களின் நெருங்கிய உறவினர்களாகவுள்ள நபர்களுக்கு விளக்கமளிக்கும் சில ஏற்பாடுகள் DV விண்ணப்பதாரிகளின் விடயங்களில் காணப்படலாம். ஆயினும் DV நிகழ்ச்சித்திட்டத்தின் காலம் சம்பந்தமான மட்டுப்பாடுகள் விண்ணப்பதாரிகள் இத்தகைய ஏற்பாடுகளிலிருந்து அனுகூலம் பெற்றுக்கொள்வதை கடினமாக்கலாம்.

## DV மோசடி எச்சரிக்கையும். ஏமாற்று வேலைகளும்

**35. இணைய மோசடிகள் மற்றும் வேண்டாத ஈ-மெயில்கள் குறித்து எவ்வாறு முறையிடுவது?**

சமஷ்டி வர்த்தக ஆணைக்குழு 17 தேசங்களைச் சேர்ந்த நுகர்வோர் பாதுகாப்பு முகவர் நிலையங்களுடன் ஒத்துழைப்பாக அனுசரணை வழங்கும் www.consumer.gov இணையதளத்தில் பிரவேசியுங்கள் நீங்கள் மோசடிகளை சமஷ்டி மோசடிகள் பணியகத்துக்கும் (FBI) முறையிடலாம். இது Internet Crime Complaint Centre எனப்படும் வேண்டாத ஈ-மெயில் குறித்து முறையிடுவதற்கு Department of Justice Contact us Page ஐ பயன்படுத்தவும்.

## DV புள்ளிவிபரவியல்

### 36. DV 2015 எத்தனை வீசாக்கள் வழங்கப்படும்?

சட்டத்தின் பிரகாரம் அதிகூடுதலாக ஒவ்வொரு வருடமும் தகுதியுள்ளவர்களுக்கு 55,000 வீசாக்கள் கிடைக்கும். எவ்வாறாயினும் 1997 நவம்பரில் அமெரிக்கக் காங்கிரஸ் நிக்காரகுவா சீராக்கல் மற்றும் மத்திய அமெரிக்க நிவாரண சட்டத்தை NACARA நிறைவேற்றியது. இது DV 1999 முதல் அவசியமானளவு காலப்பகுதிக்கு 55,000 வருடாந்தம் ஒதுக்கியளிக்கப்படும் DV க்களில் 5000 வரையில் NACARA நிகழ்ச்சித் திட்டத்தின் பயன்பாட்டுக்கு கிடைக்க வேண்டுமென்று குறித்துரைத்துள்ளது. உண்மையான மட்டுப்பாட்டின் உரைப்பு DV 2000 உடன் ஆரம்பமாகி DV 2015 நிகழ்ச்சித் திட்டம்வரை தொடர்ந்தும் பயனுறுதியுடன் விளங்கும். எனவே இந்த அறிவுறுத்தல்களில் விபரிக்கப்படும் DV நிகழ்ச்சித் திட்டத்துக்கு 50,000 வீசாக்கள் எஞ்சியுள்ளன.

## நானாவித விடயங்கள்

### 37. நான் DV நிகழ்ச்சித்திட்டத்தினூடாக வீசாவொன்றைப் பெற்றுக்கொண்டால், அமெரிக்க அரசாங்கம் எனது அமெரிக்காவுக்கான விமானப் பயணக் கட்டணத்தை வழங்குமா, வீடு மற்றும் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ள உதவுமா, மற்றும்/அல்லது நான் பூரணமாக திருப்தியாக வாழும்வரை சுகாதார கவனப் பராமரிப்பு மற்றும் ஏதாவது மானியங்களை வழங்குமா?

இல்லை. நீங்கள் DV நிகழ்ச்சித்திட்டத்தினூடாக ஒரு வீசாவைப் பெற்றுக்கொண்டால் அமெரிக்க அரசாங்கம் இச்சேவைகளில் எதையுமே உங்களுக்கு வழங்க மாட்டாது. நீங்கள் DV ஒன்றுக்கு விண்ணப்பிக்கும் முகமாக தெரிவுசெய்யப்பட்டால் வீசா வழங்குவதற்கு முதல் நீங்கள் அமெரிக்கப் பொதுமக்கள் மீது ஒரு சுமையாக மாறமாட்டீர்கள் என்பதற்கான சான்றுகளை வழங்குமாறு கேட்கப்படுவீர்கள். இச்சான்று உங்கள் தனிப்பட்ட சொத்து, அமெரிக்காவில் வாழும் உங்கள் உறவினர் அல்லது நண்பர் வழங்கும் ஆதரவு குறித்த சத்தியவுரை (படிவம் 1-134), அமெரிக்காவிலுள்ள பணிகொள்பவர் ஒருவர் வழங்கும் வேலைவாய்ப்பு விருப்பு அறிவிப்பு அல்லது ஏனைய விடயங்களை உள்ளடக்கலாம்.

## DV-2015 க்கு தகுதிபெறும் சுதேசிகளைக்கொண்ட பிராந்திய ரீதியிலான நாடுகள்/பிரதேசங்களின் நிரல்

கீழே தரப்பட்டுள்ள நிரல் DV-2015 க்குத் தகுதி பெறுவோரும் புவியியல் பிராந்திய ரீதியாக பிரிக்கப்பட்டோருமான சுதேசிகள் வாழும் நாடுகளை காண்பிக்கின்றது. வெளிநாடுகளிலுள்ள தங்கிவாழும் பிரதேசங்கள் ஆட்சிபுரியும் நாட்டின் பிராந்தியத்துடன் உள்ளடக்கப்பட்டுள்ளன. DV 2015 க்கு தகுதி பெறதா சுதேசிகளைக்கொண்ட நாடுகள் USCIS அமைப்பினால் INA 203 (c) பிரிவின் சூத்திரத்தின் பிரகாரம் இனங்காணப்பட்டவையாகும். DV நிகழ்ச்சித்திட்டத்துக்கு தகுதியற்ற சுதேசிகளைக்கொண்ட நாடுகள் (குடும்ப அனுசரணை மற்றும் வேலைவாய்ப்பு அடிப்படையிலான குடிவரவுக்கு முக்கியமான ஆதாரமாகவுள்ள நாடுகள் என்பதாலும் “ உயர்வான அனுமதி” நாடுகள் என்பதாலும்) முறையே பிராந்திய நிரல்களில் பின்னால் குறிப்பிடப்பட்டுள்ளன.

### ஆபிரிக்கா

| | |
|---|---|
| அல்ஜீரியா | மடகாஸ்கார் |

அங்கோலா
பெனின்
பொட்ஸ்வானா
பெர்கினா பஸ்கோ
புருன்டி
கமரூன்
கேப் வேர்ட்
மத்திய ஆபிரிக்க குடியரசு
சாட்
கொமரொஸ்
கொங்கோ
கொங்கோ - ஜனநாயக குடியரசு
கோட்டே டி'ஜவுஆர் (ஜவரிகோஸ்ட்)
ஜிபூத்தி
எகிப்து *
ஈகுவடோரியல் கினியா
எரித்திரியா
எத்தியோப்பியா
கெபோன்
காம்பியா
கானா
கினி
கினி-பிஸோ
கென்யா
லெசோதோ
லைபீரியா
லிபியா
மாலாவி
மாலி
மொரிடானியா
மொரீஷியஸ்
மொரோக்கோ
மொஸாம்பிக்
நமீபியா
நைகர்
ருவாண்டா
சாவோ தோமே அன்ட் பிரின்சிபே
செனீகல்
சீஷெல்ஸ்
சியெரா லியோன்
சோமாலியா
தென் சூடான்
சூடான்
சுவாஸிலாந்து
தன்சானியா
டோகோ
டுனிசியா
உகண்டா
சாம்பியா
சிம்பாப்வே
தென்னாபிரிக்கா

*1967 ஜூன் மாதத்துக்கு முன்னர் இஸ்ரேல், ஜோர்தான், சிரியா மற்றும் எகிப்து போன்ற நாடுகளால் நிர்வகிக்கப்பட்ட பிரதேசங்களின் நபர்கள் முறையே இஸ்ரேல், ஜோர்தான், சிரியா மற்றும் எகிப்து போன்ற நாடுகளை உரிமைகோரக் கூடியோராவர்: காஸா பிரதேசத்தில் பிறந்தவர்கள் எகிப்தை உரிமைகோரக்கூடியோராவர்˙ மேற்குக் கரையில் பிறந்தவர்கள் ஜோர்தானை உரிமைக் கோரக்கூடியோராவர்˙ கோலான் குன்றுகளில் பிறந்தவர்கள் சிரியாவை உரிமைக்கோரக்கூடியோராவர்

ஆப்பிரிக்காவில் நைஜீரியாவின் சுதேசிகள் இவ்வருடம் பல்வகைமை நிகழ்ச்சித்திட்டத்துக்கு தகுதிபெறாதோர் ஆவர்.

## ஆசியா

ஆப்கானிஸ்தான்
பஹ்ரேன்
பூட்டான்
புருனை
பர்மா
கம்போடியா
ஹொங்கொங் (விசேட நிர்வாகப் பிராந்தியம்) **
இந்தோனேசியா
ஈரான்
ஈராக்
இஸ்ரேல் *
ஜப்பான்
ஜோர்தான் *
குவைட்
லாவோஸ்
லெபனான்
மலேசியா
மாலைதீவு
மொங்கோலியா
நேபாளம்
வட கொரியா
ஓமான்
கட்டார்
சவூதி அரேபியா

சிங்கப்பூர்
இலங்கை
சிரியா *
தாய்வான் **
தாய்லாந்து
திமோர் லெஸ்தே
ஐக்கிய அரபு எமிரேட்ஸ்
யெமென்

*1967 ஜுன் மாதத்துக்கு முன்னராக இஸ்ரேல், ஜோர்தான், சிரியா மற்றும் எகிப்து போன்ற நாடுகளால் நிர்வகிக்கப்பட்ட பிரதேசங்களில் பிறந்த நபர்கள் முறையே இஸ்ரேல், ஜோர்தான், சிரியா மற்றும் எகிப்தை உரிமைகோரக்கூடியோராவர். காஸசா பிரதேசத்தில் பிறந்தவர்கள் எகிப்தை உரிமை கோரக்கூடியோராவர்; மேற்குக் கரையில் பிறந்தவர்கள் ஜோர்தானை உரிமை கோரக்கூடியோராவர்; கோலான் குன்றுகளில் பிறந்தவர்கள் சிரியாவை உரிமைக்கோரக்கூடியோராவர்.

**பின்வரும் ஆசிய பிராந்திய நாடுகளின் சுதேசிகள் இந்தவருட பல்வகைமை நிகழ்ச்சித்திட்டத்துக்கு தகுதியற்றோராவர்.

பங்களாதேஷ், சீனா (பெருநிலப்பரப்பில் பிறந்தோர்) இந்தியா, பாகிஸ்தான், தென்கொரியா. பிலிப்பீன்ஸ், வியட்நாம். ஹொங்கொங், SAR (ஆசிய பிராந்தியம்), மக்காவோ, SAR ( ஐரோப்பிய பிராந்தியம்). தாய்வான் (ஆசிய பிராந்தியம்) **தகுதிபெற்றவையாகும்.** அவை இங்கு நிரலிடப்பட்டுள்ளன.

## ஐரோப்பா

அல்பேனியா
அன்டோரா
ஆர்மீனியா
அவுஸ்திரியா
அசர்பைஜான்
பெலாரஸ்
பெல்ஜியம்
பொஸ்னியா
பல்கேரியா
குரோஷியா
சைப்ரஸ்
செக் குடியரசு
டென்மார்க் (வெளிநாட்டு பாகங்கள், தங்கி வாழும் பிரதேசங்கள் உள்ளிட்ட வகையில்)
எஸ்தோனியா
பின்லாந்து
பிரான்ஸ் (வெளிநாட்டு பாகங்கள், தங்கி வாழும் பிரதேசங்கள் உள்ளிட்ட வகையில்)
ஜோர்ஜியா
ஜேர்மனி
கிரீஸ்
ஹங்கேரியா
ஐஸ்லாந்து
அயர்லாந்து
இத்தாலி
கசகஸ்தான்
கோசோவோ
கிர்கிஸ்தான்
லத்வியா
லீச்டென்ஸ்டெயின்
லிதவேனியா
லக்ஸம்பேர்க்
ரஷ்யா
சான் மரினோ
சேர்பியா
ஸ்லோவாக்கியா
ஸ்லோவேனியா
ஸ்பெயின்
சுவீடன்
சுவிட்சர்லாந்து
தஜிகிஸ்தான்
துருக்கி
டேர்க்மெனிஸ்தான்
உக்ரேன்
உஸ்பெகிஸ்தான்
வத்திகான் நகரம்

மக்காவோ விசேட நிர்வாக பிராந்தியம் **
மஸிடோனியா
மோல்டா
மோல்டோவா
மொனாக்கோ
மொன்டிநீக்ரோ
நெதர்லாந்து (வெளிநாட்டு பாகங்கள், தங்கி வாழும் பிரதேசங்கள் உள்ளிட்ட வகையில்)
வடஅயர்லாந்து**
நோர்வே
போலந்து
போர்த்துக்கல் ((வெளிநாட்டு பாகங்கள், தங்கி வாழும் பிரதேசங்கள் உள்ளிட்ட வகையில்)
ரோமானியா

பின்வரும் ஐரோப்பிய நாடுகளின் சுதேசிகள் இந்தவருட DV நிகழ்ச்சித்திட்டத்துக்கு தகுதியற்றோராவர். பெரிய பிரித்தானியா (United Kingdom) பின்வரும் தங்கிவாழும் பிரதேசங்களை உள்ளடக்குவதாகும். அங்குவில்லா, பேர்மூடா, பிரிட்டிஸ் வோர்ஜின் தீவுகள், கேய்மன் தீவுகள், போக்லாண்ட் தீவுகள், ஜிப்ரால்டர், மொன்செராட், பிட்கெயார்ன், செயின்ட் ஹெலினா மற்றும் டேர்க்ஸ் மற்றும் கைக்கோஸ் தீவுகள். பல்வகைமை நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களுக்கு மாத்திரம் வட அயர்லாந்து தனியாக கையாளப்படுகின்றது. வட அயர்லாந்து **தகுதிபெற்றதாகும்**. அது மேலே நிரலிடப்பட்டுள்ளது.

## வட அமெரிக்கா

**பஹாமாஸ்**
வட அமெரிக்காவில் கனடா மற்றும் மெக்சிக்கோவின் சுதேசிகள் இந்த வருட பல்வகைமை நிகழ்ச்சித் திட்டத்துக்கு **தகுதியற்றோராவர்**.

## ஓசியானியா

அவுஸ்திரேலியா (வெளிநாடுகளிலுள்ள பாகங்கள் மற்றும் தங்கிவாழும் பிரதேசங்கள் உள்ளடங்கலாக)
பிஜி
கிரிபாட்டி
மார்ஷல் தீவுகள்
மைக்ரோனீசியா, சமஷ்டி அரசுகள்
நாவுறு
நியூசிலாந்து (வெளிநாடுகளிலுள்ள பாகங்கள் மற்றும் தங்கிவாழும் பிரதேசங்கள் உள்ளடங்கலாக)
பாலாவு
பப்புவா நியூகினி
சொலமன் தீவுகள்
டொங்கா
டுவாலு
வானோட்டு
சமோவா

## தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா மற்றும் கரீபியன்

அன்டிகுவா மற்றும் பார்புடா
ஆர்ஜன்டீனா
பார்படோஸ்
பெலீஸ்
பொலிவியா
சிலி
கொஸ்டாரிக்கா
கியூபா
டொமினிகா
கிரெனாடா
கௌதமாலா
கயானா
ஹொன்டுராஸ்
நிக்காரகுவா
பனாமா
பரகுவே
செயின்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ்
செயின்ட் லூசியா
செயின்ட் வின்சென்ட் மற்றும் கிரெனாடீஸ்
சூரிநாம்
ட்ரினிடாட் மற்றும் டொபாகோ
உருகுவே
வெனிசுலா

இப்பிராந்தியத்திலுள்ள, இந்தவருட பல்வகைமை நிகழ்ச்சித்திட்டத்துக்கு தகுதி பெறாத சுதேசிகளைக் கொண்ட நாடுகள் :

பிரேஸில், கொலம்பியா, டொமினிக்கன் குடியரசு, ஈக்குவடோ, எல் சல்வடோர், ஹைட்டி, ஜமேக்கா, மெக்ஸிகோ மற்றும் பெரு.